
GOKULAM

மார்ச் 2008 ▪ 80 பக்கங்கள் ▪ விலை ரூ.8/-

கோகுலம்

குழந்தைகளின் குதூகலம்!



வெற்றி மீது வெற்றி!

- பரீட்சை டிப்ஸ்

ாணவப் பத்திரிகையாளர் திட்டம்!

- நீங்களே கோகுலம் தயாரிக்கலாம்

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்


351

352

353


354

355

356

357

358

359

360

361


362

363

364

365

366

367

368

369

370

371

372

373

374

375

கோகுலம்

மார்ச் 2008 மலர் : 26 இதழ் : 2

உயிர்களிடத்தில் அன்பு வேணும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் – பாரதியார்



மாணவப் பத்திரிகையாளர் திட்டம்!-17



வெற்றி மீது வெற்றி!-37



துணைக்கு வந்த தோழன்!-52



பரிசுப் பெட்டிகள்!-76

அட்டையில் : மேகா, ராகுல் படம் : ஸ்ரீஹரி

கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட்லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர் :
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர்:
சீதா ரவி

உதவி ஆசிரியர்:
ஆரணி யுவராஜ்

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன்,
ச.கார்த்திகேயன்

தொலைபேசி :
2225 1522 / 2225 0623
2225 1324

தொலைநகல் :
044 - 2225 1021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
gokulam@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.96/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 25 யு.எஸ். டாலர்

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

குழந்தைகளின் குதூகலம்!



தேடி வரும் வெற்றி!

அன்புள்ள உங்களுக்கு...

இந்த இதழ் உங்கள் கைகளில் தவழும் போது ஆண்டுத் தேர்வுக்கான மும்முரத்தில் இருப்பீர்கள். உங்களின் தேர்வு திட்டமிடலிலும், வழிகாட்டுதலிலும் கோகுலம் வழக்கம் போல் இந்த ஆண்டும் பங்காற்றுகிறது. மினி கோகுலத்தில் பரீட்சை டிப்ஸ் கொடுக்கப்பட்டுள்ளன. படியுங்கள்; பயன் பெறுங்கள்.

உங்களின் ஓராண்டுத் திறமையையும் நிரூபிக்க வேண்டிய நேரமிது. ஆகவே, வீண் அரட்டை, உபயோகமற்ற விஷயங்களில் நேரத்தைச் செலவிடுவதை அறவே விடுங்கள். பொழுதுபோக்குகளையும் குறைத்துக் கொள்ளுங்கள். முக்கியமாக, தொலைக்காட்சி பார்ப்பதை தேர்வு முடியும்வரை ஒத்தி வையுங்கள். சிந்தனையை ஒருநிலைப்படுத்திப் படியுங்கள். நிச்சயம் வெற்றி உங்களைத் தேடி வரும்.

வெற்றி வந்த பிறகு கொண்டாட்டம் தான் அல்லவா? கோகுலமும் உங்கள் விடுமுறை கொண்டாட்டத்தில் பங்கேற்கப் போகிறது. அது குறித்த அறிவிப்பு எதிர் பக்கத்தில். தவிர, இந்த இதழில் 'மாணவப் பத்திரிகையாளர் திட்டம்' வெளியாகியுள்ளது. இதில் பங்கேற்று உங்கள் திறமையை நிரூபியுங்கள். மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்!

அன்புடன்
கோகு



ஆரம்பம்...
விடுமுறைக் கொண்டாட்டம்-1
ஏப்ரல் 2008 இதழ்...
காமிக்ஸ் ஸ்பெஷல்!
ஒன்றல்ல... இரண்டல்ல...
32 பக்கங்களில்...
த்ரில்...நகைச்சுவை... மாயாஜாலம்...
பல்சுவைகளில் படக்கதைகள்!
விடுமுறையை ஜாலியா கொண்டாடத் தயாராகுங்க!



குட்டிக் குரங்கு கபிக்கு, அன்று ஏகப் பசி. ''அம்மா, டிபன் ரெடியா? சீக்கிரம்! சீக்கிரம்!'' என்றது.

''கொஞ்சம் பொறுடா! சமையல் நடந்துட்டு இருக்கு'' என்றது அம்மா. கபியால் பசியை அடக்க முடியவில்லை.

''நான் ஹோட்டலுக்குப் போய் சாப்பிட்டுக்கறேன்'' என்று கூறிவிட்டு, ஹோட்டலுக்கு வந்தது. ''இப்பதான் ஒரு டூரிஸ்ட் கும்பல் வந்தது. நாலே நாலு இட்லிதான் மிச்சம் இருக்கு'' என்றார் ஹோட்டல் சர்வர்.





''எனக்கு நாலு போதாது. இன்னும் நாலு இட்லி சுட்டுக் கொடுங்க'' என்றது கபி.

''மாவு தீர்ந்துடுச்சு. அரிசிக் கடைக்காரர், கொஞ்சம் அரிசியைத்தான் தர்றார்'' என்றார் ஹோட்டல் முதலாளி. கபி அரிசிக் கடைக்குச் சென்றது.

''அண்ணாச்சி! ஹோட்டல் காரருக்கு அரிசி அதிகமாக் கொடுங்க'' என்றது.


''காசுக்குக் கொடுக்க எனக்கும் ஆசைதான். ஆனா, நெல் மண்டிக்காரர் குறைவாதானே மூட்டைகளைத் தர்றார். என்ன செய்யறது?'' என்றார்.



கதை :
எஸ்.ஜூலியட் மரிய லில்லி

கபிக்கு

கபி, நெல் மண்டிக்குச் சென்றது. அவர், ''விவசாயி எனக்குக் குறைவான நெல்தான் கொடுக்கிறார்'' என்றார். கபி, விவசாயியைத் தேடி வயல்வெளிக்குச் சென்றது. அங்கே அவர் கன்னத்தில் கைவைத்து சோகமாக அமர்ந்திருந்தார்.





''அண்ணே! வயல்தான் இவ்வளவு பெருசா இருக்கே. ஏன் அதிகமா பயிர் செய்யறதில்லே?'' என்று கேட்டது.

விவசாயி, ''மழையே இல்லை. கிடைக்கிற தண்ணீரை வெச்சு, அதிகமா எப்படிப் பயிர் செய்யறது?'' என்றார் கவலையுடன்.

''அதுக்கு என்ன செய்யறது?'' என்று கேட்டது கபி.

''நிறைய மரங்களை வளர்த்தா மழை வரும். வருங்காலத்தில் விளைச்சல் அதிகம் கிடைக்கும்'' என்றார் விவசாயி. கபி தலையாட்டிக் கிளம்பியது.





வீட்டுக்கு வந்த கபி, சாப்பிட்டு முடித்ததும் தனது நண்பர்களுடன் சேர்ந்து ஆலோசனை நடத்தியது. பிறகு, நிறைய மரக்கன்றுகளைக் கொண்டு வந்து, அந்த இடத்தைச் சுற்றி நட ஆரம்பித்தன.

வந்த பசி!

படம் :
மகேஸ்



பேனா!

பேனா நல்ல பேனாவாம்
பேப்பரில் எழுதும் பேனாவாம்
கட்டுரை கவிதை எழுதிடவே
அழகு மை தந்திடுமாம்!

எத்தனை கருவி வந்தாலும்
எத்துறை அதிகாரி யானாலும்
அத்தனை பேரின் கை எழுத்தை
சுத்தமாய் தருவது பேனாதான்!

– ஆர்.ஜி.காயத்ரி,
உறுப்பினர் எண்.2,
உ.இ.மே.பள்ளி, திசையன்விளை

சூரியன்... ஒளி... பூமி!



- பாறைகளைப் பற்றிய படிப்புக்கு 'பெட்ராலஜி' என்று பெயர்.
- 'வெள்ளை யானைகளின் நிலம்' என்றழைக்கப்படுவது தாய் லாந்து.

பெரியது...பெரியது...

- கண்டங்களில் பெரியது ... ஆசியா கண்டம்
- கடல்களில் பெரியது ... பசுபிக் பெருங்கடல்
- தீவுகளில் பெரியது ... ஆஸ்திரேலியா தீவு
- சிகரங்களில் பெரியது ... எவரெஸ்ட் சிகரம்
- மலைகளில் பெரியது ... இமயமலை
- ஆறுகளில் பெரியது ... அமேசான் ஆறு
- ஏரிகளில் பெரியது ... காஸ்பியன் ஏரி
- பாலைவனங்களில் பெரியது... சஹாரா பாலைவனம்

ஹலோ குட்டீஸ்!



உறுப்பினர் பக்கம்

நீங்கள் கோகுலம் சிறுவர் சங்கத்தின் உறுப்பினராகிவிட்டீர்களா? உங்களுக்காகவே இந்த **'உறுப்பினர் பக்கம்'** பகுதி. இதில் துணுக்கு, அறிவியல் செய்திகள், கவிதை, குட்டிக் கதை என எதை வேண்டுமானாலும் எழுதியனுப்பலாம். பிரசுரமானால் பரிசு உண்டு. உங்கள் பெயர், முகவரியுடன் மறக்காமல் உறுப்பினர் எண்ணையும் குறிப்பிடுங்கள். அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர், கோகுலம் (உறுப்பினர் பக்கம்)
47-NP., ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032

- **'மலைகளின் நிலம்'** என்றழைக்கப்படுவது **மியான்மர்**.
- மணலின் வேதியியல் பெயர் **சிலிகான்-டை-ஆக்ஸைடு.**
- மண்புழுவுக்கு **ஐந்து இதயங்கள்** உள்ளன.
- மிக வெப்பமான கோள் **வெள்ளி**.
- உலகில் 2000 வகையான **பாம்புகள்** உள்ளன.
- சூரிய ஒளி பூமியை வந்தடைய **8.3 நிமிடங்கள்** ஆகின்றன.
- அரபிக் கடலின் ராணி எனப்படுவது **கொச்சின்**.

- அதிபன் அன்புமணி,
உறுப்பினர் எண்: 120
நான்காம் வகுப்பு,
கலைமகள் கல்வி நிலையம்,
ஈரோடு.



* அமேசான்



* எவரெஸ்ட்



* சஹாரா

- வி.பிரகாஷ்,
உறுப்பினர் எண்: 283
பள்ளிபாளையம்

அரண்மனைகள்!




தமிழ்நாட்டில் பண்டைய தமிழர்களின் வரலாற்றுச் சான்றாக பத்து அரண்மனைகள் உள்ளன அவை:

1. மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை.
2. திருச்சி மங்கம்மாள் அரண்மனை.
3. தஞ்சாவூர் சரபோஜி அரண்மனை.
4. புதுக்கோட்டை அரண்மனை.
5. சென்னை சேப்பாக்கம் அரண்மனை.
6. சிவகங்கை அரண்மனை.
7. எட்டயபுரம் அரண்மனை.
8. இராமநாதபுரம் அரண்மனை.
9. பத்மனாபபுரம் அரண்மனை.
10. மதுரை அரசி மங்கம்மாள் அரண்மனை.

- மு. சிவரஞ்சனி, உறுப்பினர் எண்: 179, ஸ்ரீ மகாதேவ குருஜி மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, வலங்கைமான்

தெரிஞ்சுக்கங்க!

பழ.முருகப்பன், உறுப்பினர் எண்: 238 பதினொராம் வகுப்பு, ஸ்ரீ சங்கரா வித்யாலயா பள்ளி, சென்னை



✱ மெகல்லன்



இந்தியாவின் மிகப் பெரிய நூலகம் உள்ள இடம் - **கொல்கத்தா**

ஓர் அணிலின் சராசரி ஆயுட்காலம் - **ஒன்பது ஆண்டுகள்**

பிலிப்பைன்ஸ் தீவுகளைக் கண்டுபிடித்தவர் - **மெகல்லன்**

இரண்டாம் அசோகர் என்றழைக்கப்பட்டவர் - **கனிஷ்கர்**

பாண்டிச்சேரியின் பழைய பெயர் - **வேதபுரி**

செப்பு நாணயங்களை வெளியிட்டவர் - **முகமது பின் துக்ளக்**

எரிமலை இல்லாத கண்டம் - **ஆஸ்திரேலியா**



பெயர் : ....

முகவரி : ....

....

....

....

ஒரு வருட சந்தா ரூ. 96/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். உள்ளூர் காசோலைகள் மட்டுமே ஏற்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்,) கல்கி பில்டிங்ஸ்,
47-N.P, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032



மிட்டாய் கடையில் மிட்டு!

சோலையூர் ஓர் அழகான ஊர். அந்த ஊரின் எல்லையில் ஒரு மண்டபம் இருந்தது. அந்த மண்டபத்தின் பின்பக்கம் கட்டெறும்புக் கூட்டம் வசித்து வந்தது. அதில் ஒரு குடும்பத்தில் 'மிட்டு' என்ற குட்டி எறும்பு இருந்தது. மிட்டு நல்ல பிள்ளையாயிருந்தாலும் அதற்கு உழைப்பதற்குப் பிடிக்கவில்லை. வேலை என்றாலே எரிச்சலாக இருந்தது. அம்மாவிடம் அடிக்கடி அதற்கு சண்டைதான்!

''அம்மா, அங்கே பார்! மரத்தில் உள்ள பறவைகள் இரை தேடும் நேரம் தவிர, மற்ற நேரங்களில் விளையாடுகின்றன. மற்ற விலங்குகளையும் பார். அவையும் விளையாடிக்கொண்டு சந்தோஷமாக இருக்கின்றன. நீதான் எப்போது பார்த்தாலும் வேலை செய்ய வேண்டும் என்கிறாய்'' என்று மிட்டு சலித்துக்கொண்டது.

அம்மா எறும்பு, ''உன் வேலையை ஒழுங்காகச் செய். அதைவிட்டு, மற்றவர்களைப் பற்றி ஆராய்ச்சி செய்துகொண்டிருக்காதே. உனக்கான கடமையைச் சரியாகச் செய்யப் பார். எல்லா படைப்பிலும் சிறந்த படைப்பான மனிதனே நம்மை உழைப்புக்கு உதாரணம் காட்டுகிறான்'' என்றது. இதனால் அம்மாவை வெறுத்த மிட்டு, அங்கிருந்து வெளியேறத் திட்டமிட்டது.

அன்று இரவே கிளம்பியது. அந்த ஊரில் ஒரு மிட்டாய் கடை இருந்தது. நீண்ட தூரம் வந்த மிட்டுவின் கண்களில் அந்த மிட்டாய்

டி.எஸ்.ஜின்னீரா தஹஸின்


கடை தென்பட்டது. மிட்டு மிகவும் சந்தோஷமாகிவிட்டது. பக்கத்திலே ஒரு சிறு புற்று அமைத்து, அங்கேயே தங்கி விட்டது.

தினமும் மிட்டாய் கடைக்குள் சென்று, மிட்டாயை ருசி பார்க்க ஆரம்பித்தது. நாட்கள் செல்லச் செல்ல, அது புற்று வீட்டுக்குப் போவதையே மறந்து அங்கிருந்த ஒரு அட்டைப் பெட்டியில் தங்கிவிட்டது.


விதவிதமாய் மிட்டாய் இனிப்பு வகை சாப்பிட்டதில் மிகவும் பருத்துவிட்டது. அதனால் மற்ற எறும்புகளைப் போல சுறு சுறுப்பாக இல்லாமல் சாப்பாடு, தூக்கம் என்று காலம் கழிந்தது.

அன்று, தொழிற்சாலையைச் சுத்தம் செய்தார்கள். மிட்டு இருந்த அட்டைப் பெட்டிப் பக்கம் ஒரு கை நீண்டு வந்தது. ''பாருடா, எவ்வளவு பெரிய கட்டெறும்பு!'' என்ற ஒருவன் அதனைக் கையில் பிடித்தான். மிட்டு தப்பிக்க முயன்றது.


அதற்குள் அந்த மனிதன் மிட்டுவைக் கீழே போட்டு தனது காலால் நசுக்கினான். சோம்பேறி மிட்டு, தனது நிலையை எண்ணியவாறு இறந்தது.




தேவ
பூமி!







வேத காலத்துக்கு முன்பு, பல்வேறு பழங்குடி இன மக்கள் வசித்த 'தேவ பூமி' என்று அழைக்கப்பட்ட பகுதிதான் இன்று இந்திய மாநிலங்களுள் ஒன்றான இமாசலப் பிரதேசம். காஷ்மீர் நாட்டை ஆண்ட ஷங்கர் வர்மா என்ற மன்னரது கட்டுப்பாட்டில் இருந்த நிலப் பகுதியின் மீது கஜினி முகம்மது படை எடுத்துக் கைப்பற்றினார். வட இந்தியாவின் மற்ற பகுதிகளைப் போலவே, இமாசலப் பிரதேசத்தில் இருந்த கோயில்கள் சூறையாடப்பட்டு, அழிக்கப்பட்டன. அதன் பிறகு ரஜபுத்திர மன்னர்கள் இங்கு ஆட்சி நடத்தினார்கள். 1804ல் 'மகாராஜா ரஞ்சித் சிங்' படை வந்து, ரஜபுத்திரர்களைத் தோற்கடித்து ஆட்சியைக் கைப்பற்றினார். அதனைத் தொடர்ந்து, நேபாளத்திலிருந்து இங்கு வந்த கூர்க்காக்களின் கைக்கு ஆட்சி மாறியது. அப்போது மக்கள் பெரும் பிரச்னைகளுக்குள்ளானார்கள். 1815-16ல் கூர்க்காக்களை பிரிட்டிஷார் வென்றனர்.

1857ல் நடந்த முதல் இந்திய சுதந்திரப் போரில், இந்த மலைப்பகுதி மக்கள் ஈடுபாடு கொண்டு பங்கேற்கவில்லை. அது மட்டுமில்லை, இந்தப் பகுதியில் ஆட்சி செய்த சில சிறு மன்னர்கள் பிரிட்டிஷாருக்கு ஆதரவாகவும் செயல்பட்டார்கள். முதல் உலகப் போரின்போது, சில சிறு மன்னர்கள் தங்களது படை வீரர்களை பிரிட்டிஷ் படைக்கு ஆதரவாக அனுப்பி வைத்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால், 1914க்குப் பிறகு நிலைமை மாறியது. இந்திய விடுதலைப் போரில் இமாசலப் பிரதேசப் பகுதியைச் சார்ந்த மக்களும் பெருமளவில் பங்கேற்றார்கள்.

இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு, முதலில் மத்திய அரசின் நேரடி ஆட்சிக்கு உட்பட்ட பகுதியாக இருந்த இமாசலப் பிரேதசம், 1970ல் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட 'இமாசலப் பிரதேச மாநில சட்டத்தின்'படி இந்தியாவின் மாநிலமாக அங்கீகரிக்கப்பட்டது.

இந்தியாவில் உருவாக்கப்பட்ட பதினெட்டா

கௌதம்ராம்

வது மாநிலம் இமாசலப் பிரதேசம்!

வடக்கில் ஜம்மு-காஷ்மீர், மேற்கே பஞ்சாப், தெற்கே ஹரியானா, தென் கிழக்கே உத்ராஞ்சல், கிழக்கே திபெத் அமைந்த இமாசலப் பிரதேசம், சுமார் 55 ஆயிரம் சதுர கிலோ மீட்டர் பரந்து விரிந்துள்ளது. கடல் மட்டத்திலிருந்து 450 மீட்டர் உயரத்தில் தொடங்கி 6,500 மீட்டர் உயரம் வரையிலான இமய மலைப் பகுதியில் அமைந்துள்ள இம்மாநிலத்து மக்கள், இந்தி தவிர, பாகரி, பஞ்சாபி, கின்னாரி மொழிகளும் பேசுகிறார்கள். 2001 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி இங்கு மக்கள் தொகை சுமார் 60 லட்சத்து 77 ஆயிரம். கல்வி அறிவு பெற்றோர் 77 சதவிகிதத்தினர். இமாசலப் பிரதேசத்தில் இந்துக்களும், முஸ்லிம்களும், பௌத்தர்களும் அதிகமாக வசிக்கிறார்கள். தலைநகரம் சிம்லா.

இமாசலப் பிரதேசத்தில் பெரியதும், சிறியதுமாக சுமார் ஐம்பது நகரங்கள் இருக்கின்றன. இவற்றில் மிகவும் சிறிய நகரம் 'நைனா தேவி'. மாநிலத்தின் மிகப் பெரிய நகரமாக சிம்லா உள்ளது. இமாசலப் பிரதேசம் குறித்த முக்கிய விஷயம், இம்மாநில மக்கள் தொகையில் 7.5% மட்டுமே நகர்ப்புறத்தில் வசிப்பவர்கள். மீதி மக்கள் மலை கிராமங்களில் பரவலாக உள்ளனர். மாநிலத்தில் வாழும் 70சதவிகித மக்களின் தொழில், விவசாயம்!

இமயமலைப் பகுதியில் இம்மாநிலம் அமைந்துள்ளதால், மாநிலத்தின் முன்னேற்றம் சாலைப் போக்குவரத்தையே நம்பியுள்ளது. இதை உணர்ந்து, சுதந்திர இந்தியாவில் தீட்டப்பட்ட முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் இமாசலத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் பாதிக்கு மேல் மலைச் சாலைகள் அமைக்கவும், அவற்றை மேம்படுத்தவும் செலவிடப்பட்டது. இன்று இந்தியாவின் நல்ல முன்னேற்றமடைந்த மாநிலங்களில் ஒன்றாக இமாசலம் விளங்குகிறது.

இமாசலத்தில் மக்கள் பல்வேறு பண்டிகைகளைக் கொண்டாடுகிறார்கள். உள்ளூர் திருவிழாக்களும், மேளாக்களும் நிறைய உண்டு! புகழ் பெற்ற 'திரிலோக்னாத்' கோயிலில் ஆண்டுதோறும் கொண்டாடப்படுவது 'பொரி திருவிழா'! அன்று, இறைவனுக்கு பால் மற்றும் தயிர் அபிஷேகம் செய்து, மேளதாளம், சங்கு முழங்க வீதி உலா ஆரம்பிக்கும். ஊர்வலத்தில் ஒரு குதிரை முன்னணியில் செல்லும். அந்தக் குதிரையில் திரிலோகனாதரே ஏறி பவனி வருவதாக ஐதீகம். ஊர்வலம், முன்னாள் அரச பரம்பரையினர் மாளிகைக்குச் செல்ல, அங்கு விமரிசையான வரவேற்பு அளிக்கப்படும். அந்தக் குதிரையில் இன்றைய அரச பரம்பரையினர் ஏறிக்கொண்டு, கோயிலுக்கு அருகில் நடைபெறும் கோலாகலமான மேளாவைப் பார்வையிடுவர். அன்று இரவும், பகலும் வெண்ணெயில் விளக்கு ஏற்றுவது விசேஷம்!



இங்குள்ள சுடுநீர் ஊற்றுகள் புகழ் பெற்றவை. கந்தகச் சத்து கொண்ட இந்தச் சுடுநீர் தோல் மற்றும் பல நோய்களைப் போக்குவதாகச் சொல்லப்படுகிறது.

'குக்னாமி' என்பது பாம்புகளை வழிபடும் பண்டிகை. அன்றைய தினம், மக்கள் வீடுகளில், சுவரில் மஞ்சளால் பாம்புப் படம் வரைந்து பூஜை செய்வார்கள். கோயில்களில் தானியங்கள் சேகரிக்கப்பட்டு, பொங்கலிட்டு வழிபாடு நடக்கும். மக்கள் பாம்புப் புற்றுகளில் பாலும், வெண்ணெயும் ஊற்றி வழிபடுவார்கள். பூக்கள் திருவிழா, பைசாகி என்ற அறுவடைத் திருவிழா, சகோதரர்களுக்கு ராக்கி கட்டும் 'ராகாதும்னி' என்று பல பண்டிகைகள் விசேஷம்.

இன்று இந்தியாவில் சுற்றுலாப் பயணிகளை அதிகம் கவரும் மாநிலங்களுள் ஒன்றாகத் திகழ்கிறது இமாசலப் பிரதேசம். சிம்லா, தரம்சாலா, குலு, மணாலி, மணிகரன் ஆகியவை இமாசலத்தின் முக்கிய சுற்றுலாத் தலங்களாகும். மணாலிக்குச் சிறிது தூரத்தில் இருக்கும் இடம் மணிகரன். இங்குள்ள சுடுநீர் ஊற்றுகள் புகழ் பெற்றவை. கந்தகச் சத்து கொண்ட இந்தச் சுடுநீர் தோல் மற்றும் பல நோய்களைப் போக்குவதாகச் சொல்லப்படுகிறது.

இமாசலம் பல்வகை நடனங்களுக்கும் பெயர் பெற்றது. மாலை நடனம், சம்பகா என்னும் ராட்சஷ நடனம், பாம்புகளை நினைவூட்டும் நாகா நடனம், புத்தரது புகழ் பாடும் 'ஷாபு' நடனம் ஆகியவை சில முக்கிய நடனங்களாகும்.

உலோக சிற்பங்கள், ஓவியம், கலைநயம் மிக்க மர வேலைப்பாடுகள், நகைகள், துணி ஓவியங்கள், விளையாட்டுப் பொம்மைகள் தயாரிப்பு, வேலைப்பாடு மிக்க காலணி தயாரிப்பு, பச்சை குத்துவது போன்றவை இமாசலப் பிரதேசத்தின் கலை வடிவங்களாகும்! ◎



வின்னர்ஸ்!

விடையைச் சொல்; பரிசை வெல் - 7ல் கலந்துகொண்டவர்களில் பெரும்பாலானோர் சரியான விடைகளை எழுதியிருந்தார்கள். அவர்களில் குலுக்கல் மூலம் பத்து குட்டீஸ்களுக்கு தலா ரூ.100/- வீதம் பரிசுத் தொகை பகிர்ந்தளிக்கப்படுகிறது.

சரியான விடைகள்:

1. ஜெருஸ்ஸலம், 2. அப்பம்
3. 380 – 900 மி.மீட்டர்,
4. த்யான் சந்த், 5. ஒன்பது

பரிசு பெறுவோர்:

1. மு.கவிதா - சென்னை
2. அ.மணிலட்சுமணன் - புதுச்சேரி
3. ர.ஸ்ரீநிதி - இராணிப்பேட்டை
4. தே.வனஜா - கடம்பத்தூர்
5. க.தீபிகா - திண்டிவனம்
6. கோ.அஜய்அரவிந்த் - கடலூர்
7. ஆர்.பிரவீன்குமார் - சேலம்
8.கே.ஆர்.அன்ஸ்வெல் ராஸிஸ்ட் - கன்னியாகுமரி
9. ச.ரஞ்சிதா சத்தியவதி - மதுரை
10. ஜே.ஜெஸிந்த் பிரிஸில்லா - சென்னை.

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள்; கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றி!

சிரிப்பலை



"ஏண்டா...சேகர், ஓடாத வாட்ச்சைக் கையில கட்டி இருக்கியே... மணி கேட்டா, என்ன செய்வே?"

"மணிதான் ஏற்கெனவே கையில வாட்ச் கட்டி இருக்கானே, சார்!"

- 'குலசை' க.மீ. நஜ்முதீன்



"என்ன அமைச்சரே... இளவரசனின் தேர்ச்சி அட்டையைப் புறாக் காலில் கட்டி அனுப்பியுள்ளார்கள்?"

"அரசே, இதுதான் 'புறா'கிரஸ் கார்டு."

- புவனா நித்திஷ்



"நம்ம ஊர்ல ஒரு நீச்சல் குளம் கட்டப் போறோம். உங்களால முடிஞ்ச உதவியைச் செய்யணும்."

"சரி, பத்து குடம் தண்ணீர் தர்றேன்."

- சென்னிமலை சி.பி. செந்தில்குமார்



"ஔவை பாட்டிக்கு 'நாவல் பழம்' ரொம்ப பிடிக்கும். ஏன் சொல்லு?"

"அவங்க ஒரு எழுத்தாளர் அதான்!"

- கு:அருணாசலம்

தலைக்கு டிக்ஷனரி!



"ஏன் தூங்கும்போது தலைக்கு 'டிக்ஷனரி' வச்சுட்டுத் தூங்கறே?"

"'அர்த்தமில்லாத' கனவா வருது."

- மா.கண்ணன்

உங்கள் உள்ளம் கவர்ந்த கோகுலத்தை ஒரு மாதம் நீங்களே தயாரிக்கும் வாய்ப்பு கிடைத்தால் எப்படி இருக்கும்? நினைத்துப் பார்க்கவே சந்தோஷமாக இருக்கிறதல்லவா? அதை நிஜமாக்கவே இந்த மெகா திட்டம்!

ஜூன் 2008 இதழ், 'வாசகர் சிறப்பிதழாக' வருகிறது. அதனைத் தயாரிக்கப் போவது உங்களில் சிலர். அதாவது,



வாங்க குட்டீஸ் கோகுலம் தயாரிக்க!



எங்களது அலுவலகத்துக்கு வந்து, சுமார் பதினைந்து நாட்கள் இருந்து, ஆசிரியர் மற்றும் உதவி ஆசிரியருடன் சேர்ந்து கோகுலத்தை தயாரிக்கப் போகிறீர்கள். கதை, கட்டுரைகளைத் தேர்ந்தெடுக்கப் போவது நீங்கள்! வடிவமைப்புக் கலைஞர்களுடன் சேர்ந்து இதழை வடிவமைக்கவும் போவதும் நீங்கள்! தவிர, ஒரு வி.ஐ.பியைச் சந்தித்துப் பேட்டி எடுக்கவும் வாய்ப்பு! சுருக்கமாகச் சொன்னால், 'ஜூன் 2008' கோகுலம், அட்டை டு அட்டை உங்கள் கைவண்ணத்தில் வெளி வரும். அதற்கு நீங்கள் செய்ய வேண்டியது என்ன?









✎ நீங்கள் பள்ளியில் படிப்பவராக இருக்க வேண்டும். உங்கள் வயது 12லிருந்து 16க்குள் இருக்க வேண்டும். அதற்கான சான்றிதழ் நகலை அனுப்ப வேண்டும்.

✎ நீங்கள் சென்னைக்கு வெளியே வசிப்பவராக இருந்தால், சென்னையில் உங்கள் உறவினர் அல்லது நண்பர் வீட்டில் தங்கும் வசதி உள்ளவராக இருக்க வேண்டும்.

✎ இதழ் தயாரித்து முடிக்கும் வரை தினமும் கோகுலம் அலுவலகத்துக்கு வந்துபோகத் தயாராகயிருக்க வேண்டும்.

✎ கொடுக்கப்பட்டுள்ள கூப்பனைப் பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும். நகல் எடுக்காதீர்கள். அத்துடன் உங்களின் படைப்புகள் (கதை, கவிதை, கட்டுரை, ஓவியம் போன்றவை) ஏற்கெனவே சிறுவர் பத்திரிகைகளில் இடம் பெற்றிருந்தால், அது குறித்த விவரத்தை வெள்ளைத்தாளில் சுருக்கமாக எழுதியனுப்புங்கள்.

✎ நீங்கள் கோகுலம் சிறுவர் சங்கத்தில் உறுப்பினராகி இருந்தால் உறுப்பினர் எண்ணைக் குறிப்பிடுங்கள். உறுப்பினர் அல்லாதவர்களும் போட்டியில் பங்கேற்கலாம்.

✎ இதழ் தயாரிக்கும் பணி **ஏப்ரல் 25 முதல், மே 15க்குள்** நடைபெறும். தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குக் கடிதம் மூலம் தெரிவிக்கப்படும். இடையில் கடித விசாரிப்போ, தொலைபேசி விசாரிப்போ கூடாது.

✎ இதில் பங்கேற்க கட்டணம் ஏதுமில்லை.

✎ ஆசிரியர் மற்றும் உதவி ஆசிரியரின் மேற்பார்வையில் இதழ் தயாரிப்புப் பணி நடைபெறும். எத்தனை பேர் தேர்ந்தெடுக்கப்படுவர் என்பது அடுத்த இதழில் அறிவிக்கப்படும்.

✎ பணிக்காலத்துக்கான சன்மானத்தை கோகுலம் அலுவலகம் நிர்ணயிக்கும்.

✎ முக்கியமான நிபந்தனை: உங்களுக்குத் தமிழ் நன்கு படிக்கவும், எழுதவும் தெரிந்திருக்க வேண்டும். முடிவு தேதிக்குப் பிறகு வருகிற கூப்பன்கள் ஏற்கப்படாது. தபாலில் தவறினால் நிர்வாகம் பொறுப்பல்ல.

✎ இது குறித்து எழும் சந்தேகங்களில் ஆசிரியரின் தீர்ப்பே இறுதி.

✎ முடிவு தேதி: **20.3.2008.**



அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர் - கோகுலம்
(மாணவப் பத்திரிகையாளர்)
47-NP., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032

மாணவப் பத்திரிகையாளர் திட்டம்

என் பெயர் : ____________

உறுப்பினர் எண் : ____________

பிறந்த தேதி : ____________

வகுப்பு : ____________

பள்ளி : ____________

____

புகைப்படம்

பெற்றோர் : ____________

வீட்டு முகவரி : ____________

____

____

தொலைபேசி : ____________

உங்கள் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்கிறேன்.

(கையொப்பம்)

எனது மகன்/மகள் உங்கள் 'மாணவப் பத்திரிகையாளர்' திட்டத்தில் பங்கேற்க சம்மதிக்கிறேன்; நிபந்தனைகளை ஏற்கிறேன்.

(தந்தை/தாய் கையொப்பம்)

● இந்தக் கூப்பனுடன் பிறந்த தேதிக்கான ஏதாவது சான்றிதழின் நகல், சிறுவர் பத்திரிகைகளில் வெளியான உங்கள் படைப்புகளின் விவரத்தை இணைக்கவும்.



தொலைக்காட்சி!

- வெ.தமிழழகன்

தொலைவே நடக்குது பலகாட்சி
உடனே தருது தொலைக்காட்சி!
கலையும் பாட்டும் கலந்தாச்சு
கண்ணுக்கு நல்ல விருந்தாச்சு!

வியக்க வைக்கும் நாட்டியங்கள்
விதவிதமான நாடகங்கள்!
விளையும் பயிர்கள் வளம் பெறவே
விந்தை யூட்டும் வழி வகைகள்!

அனைத்தும் கலந்த பல காட்சி
அள்ளித் தருவது தொலைக்காட்சி!
அளவாய் இதனைக் காணுங்கள்
அளிக்கும் நன்மை, உயருங்கள்!

ஒன்றே, நன்றே!

- பண்ருட்டி பரமசிவன்

ஆற்றின் பெயர்கள் வெவ்வேறாம்
ஆனால் தண்ணீர் ஒன்றேயாம்
ஆற்றின் தண்ணீர் யாவர்க்கும்
அளிக்கும் நன்மை நன்றேயாம்!
ஊரின் பெயர்கள் வெவ்வேறாம்
உள்ள மக்கள் ஒன்றேயாம்
ஊரின் மக்கள் உழைப்பாலே
ஊரும் உலகும் நன்றேயாம்!
இனமும் மதமும் வெவ்வேறாம்
எனினும் மனமோ ஒன்றேயாம்
மனத்தில் அன்புப்
பெருக்கெடுத்தால்
மக்கள் வாழ்வு நன்றேயாம்!



கவிதைப் பூங்கா

முயற்சியும் வெற்றியும்!

- அ.க.சாயிசுதா



கல்வி மேன்மைப் படியென்று
தோழி அறிவாய் நீ இன்று!
அதிலும் கடினப் படியுண்டு
ஆனால் உழைக்கப் பலனுண்டு!

கடினம் என்ற நினைப்போடு
நொடியில் தளர்வு கொள்ளாதே
முடியா தென்று தடுமாறி
முயற்சி இன்றி வீழாதே!

இனிய தோழி நினைவிற்கொள்
இனிமை என்றும் கல்விதான்
இனிதே துணிந்து படித்திட்டால்
இன்பம் என்றும் உனக்கேதான்!

- ஒன்பதாம் வகுப்பு,
பெண்கள் மேல்நிலைப் பள்ளி, ஸ்ரீரங்கம்

பெருமாள் மாட்டைக் காணவே
பாலர் கூட்டம் கூடுதாம்
அருமை மத்தளம் முழங்கிட
ஊரை ஒன்று சேர்க்குதாம்!

தொட்டுப் பார்த்துக் குழந்தைகள்
துள்ளிக் குதித்து ஆடிட,
கொம்பில் குஞ்சம் அசையுதாம்
குலுங்கச் சிரிக்க வைக்குதாம்!

பூம்பூம் மத்தளம் ஓசையில்
பிள்ளைகள் ஆட்டம் போட்டிட
ஆம்ஆம் என்று தலையாட்டி
அங்கீகாரம் செய்யுதாம்!




பெருமாள் மாடு!

- கு.காளிமுத்து

அழகும் ஆபத்தும்!


கதை : கலைமதி ராஜா   படம் : பிள்ளை





ஒரு பெரிய மீன் -
பசங்களா! ஏன் இப்படி ஓடி வர்றீங்க?
கரையில் காகம் இருக்கு. அதனோட நிறமும் குரலும் பயமா இருக்கு? அதான்...
காகத்தால எந்த ஆபத்தும் இல்லே. உருவத்தை மட்டுமே வெச்சு ஒருத்தரைப் பற்றி தப்பா நினைக்கக் கூடாது.
இந்த தாத்தாவுக்கு வேற வேலை இல்லை. எப்பவும் உபதேசம் தான்.
அடுத்த நாள் -
ஏய், அங்கே பாரு வெள்ளையா...
அட! என்ன பறவை அது?
கொக்கு கரையில் அமர்ந்தது.
வெள்ளையா எவ்வளவு அழகா இருக்கு! அலகும் நீளமா கச்சிதமா இருக்கு.
அடடே! அதனோட நடையைப் பாரேன்.


பேச்சுக் குரல் கேட்டு கொக்கு குளத்தை நெருங்கியது.
அண்ணே! நீங்க ரொம்ப அழகா இருக்கீங்க. உங்க அலகைத் தொட்டுப் பார்க்கலாமா?
ஓ! தொட்டுப் பாரேன்.
ஒரு மீன் குஞ்சு கொக்கை நெருங்க -
ஆ! என்னை விடு!
நல்லா மாட்டினியா?
ஆபத்து... ஓடுங்க! ஓடுங்க!
ஒரு மீன் குஞ்சுடன் கொக்கு வானில் பறந்தது.
தாத்தா சொன்னது சரியாப் போச்சு. அழகை மட்டும் பார்த்து ஒருத்தரோடு பழகக்கூடாது.
ஆமாம்! ஆமாம்!
அன்று முதல் மற்ற மீன் குஞ்சுகள் கவனமாக இருந்தன.

புதிய விஷயங்கள்...






பிரபஞ்சத்தைப் பற்றிய வியப்பான செய்திகள்!

ஆசிரியர்: கனி விமலநாதன்

வெளியீடு: மணிமேகலைப் பிரசுரம், 7, தணிகாசலம் சாலை, தியாகராயநகர், சென்னை - 17

விலை: ரூ.45/-

பிரபஞ்சத்தைப் பற்றி எத்தனையோ புத்தகங்கள் வெளியாகியுள்ளன. 'கற்றது கை மண்' என்பது போல ஒவ்வொரு நூலிலும் ஏதாவது ஒரு புதிய விஷயம் கிடைக்கும். இதிலும் அப்படி சில விஷயங்கள் உண்டு!




சித்திரங்கள் சொல்லும் பொது அறிவுச் செய்திகள்!

ஆசிரியர் : அப்பாஸ் மந்திரி

வெளியீடு : நற்பவி பிரசுரம், 57 - C, பசுல்லா சாலை, தியாகராயநகர், சென்னை - 17

விலை : ரூ 50/-

பொது அறிவுச் செய்திகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு சித்திரம் கொடுக்கப்பட்டுள்ளன. எளிமையாக, பெரிய எழுத்தில் நேர்த்தியான அச்சில் நூல் இருப்பது சிறப்பு!



சிந்திக்கத் தூண்டும் சித்திரப் புதிர்கள்!

ஆசிரியர் : அப்பாஸ் மந்திரி

வெளியீடு: புதிய புத்தக உலகம், 52-C, வடக்கு உஸ்மான் சாலை, தியாகராயநகர், சென்னை - 17

விலை : ரூ.60/-

எளிமையான புதிர்கள், அழகழகான படங்கள், வழி காட்டுங்கள் போன்ற குட்டீஸ்களைக் கவரும் புதிர்களும் உள்ளன. அழகான முயற்சி!

தி ருவிழா களைகட்டிக்கொண்டிருந்தது.

''ரஞ்சன், வா அங்கே போகலாம்'' என்றார் சித்தப்பா.

அவர் காட்டிய திசையில் சின்னதாக ஓர் அரங்கம் இருந்தது. அதன் வாசலில் நாலணா, ஒரு ரூபாய் என்று கட்டண விகிதங்கள் குறிக்கப்பட்டிருந்தன.

மூன்று ரூபாய் கொடுத்து மூன்று சீட்டுகள் வாங்கிக்கொண்டு உள்ளே போனார்கள். ஒரு ரூபாய் சீட்டு வாங்கியவர்களுக்கு நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. மர நாற்காலி. ''பாத்து உக்காந்



துக்க. சில நாற்காலிங்க லொட லொடன்னு ஆடும்'' என்றார் சித்தப்பா. மூவரும் அமர்ந்தனர்.

ரஞ்சனின் கவனம் முழுவதும் எதிரிலிருந்த சின்ன மேடை மற்றும் அதைச் சுற்றிப் போடப் பட்டிருந்த திரை மீதே இருந்தது. கொஞ்ச நேரத் தில் பலத்த ஜால்ரா ஒலி கேட்டது. கூடவே தபேலாவையும் யாரோ வாசித்தார்கள்.

ராமபிரானின் அருமை பெருமைகளை ஒரு வர் பாட்டில் பாடிக்கொண்டிருக்க, சட்டென்று திரை விலகியது. அதற்குள்ளே ஒரு ராமர் பொம்மை இருந்தது. அந்த ராமர் அந்தப் பக்கமும் இந்தப் பக்கமுமாக திரும்பினார். பின் கம்பீரமாக கொஞ்ச தூரம் நடந்தார். வில்லை எடுப்பதுபோல் கைகளை வித விதமாக அசைத்தார்.

ரஞ்சனுக்கு ஆச்சரியம் தாங்க வில்லை. ''சித்தப்பா, இந்தப் பொம்மை எப்படி ஆடுது? அசங்குது?'' என்று கேட்டான்.

தமிழ்ச்செல்வி 'குபுக்'கென்று சிரித்தாள். ''ஐய, நல்லா உத்துப் பாரு'' என்றாள்.

ரஞ்சன் உற்றுப் பார்க்க, அந்த மர்மம் விடுபட்டது. அந்தப்



பொம்மையை தலை, கழுத்து, கை, கால் என்று தனித்தனி துண்டுகளாகச் செய்து இணைத் திருந்தார்கள். ஒவ்வொரு பகுதி யிலிருந்தும் ஒரு நூல் உட்புற மாகச் சென்றுகொண்டிருந்தது.

''யாரோ பின்னாலே இருந்து

அருண் சரண்யா



பொம்மலாட்டம்!

இந்தக் கயிறுகளை அசைக்கிறாங்க. அதனாலேதான் பொம்மை ஆடுவதுபோலத் தோணுது. சரிதானே?'' என்றான் ரஞ்சன்.

''பின்னாலே இருக்கும் பொம்மலாட்டக் கலைஞர், தன் வெவ்வேறு விரல்களில் பொம்மையின் பல்வேறு உடல் பகுதிகளில் இணைக்கப்பட்டுள்ள நூல்களைச் சுற்றிக் கொண்டிருப்பார். தன் விரல்களைப் பொருத்தமாக அசைப்பதன் மூலம், இந்த பொம்மை நிஜமாகவே இயங்குவதுபோல் அவர் செய்வார்'' என்றார்.

ரஞ்சனின் முகத்தில் இன்னமும் சில சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ளும் ஆர்வம் தெரிந்தது. ''இப்போதைக்கு பொம்மலாட்ட நிகழ்ச்சியைப் பாரு. உன் சந்தேகங்களை அப்புறமாகக் கேட்கலாம்'' என்றார் சித்தப்பா.

ராமருக்குப் பிறகு லட்சுமணன் வந்தார். சீதை வந்தாள். எல்லோருக்குமே ஆடைகள் நீளமாகத் தொங்கிக்கொண்டிருந்தன. அதாவது பொம்மைகளின் பாதங்களைப் பார்க்க முடியவில்லை. ஒருவேளை அந்த பொம்மைகளுக்கு பாதமே இல்லையோ என்னவோ!

சற்று நேரத்தில் ராவணன் வந்ததும் எல்லோரும் கைதட்டினார்கள். காரணம், பத்து தலைகளோடு அந்தப் பொம்மை மிகவும் வித்தியாசமாக இருந்ததுதான். ராவணனின் சபைக்கு அனுமார் வந்துசேர, நிகழ்ச்சியைப் பார்த்தவர்கள் மேலும் கைதட்டி மகிழ்ந்தார்கள்.

சென்னையில் பெரிய திரையரங்குகளின்

"பொம்மையை ஆட்டுவிப்பவர்தான் இப்படி பலவிதமாகக் குரல் கொடுப்பார். அப்போதுதான் அவர் சொல்வதற்கும் பொம்மை அசைவதற்கும் ஒத்துப்போகும்"



பிரமாண்டமான திரைகளில் பல சினிமாக்களை ரஞ்சன் பார்த்திருக்கிறான். ஆனாலும் இந்தப் பொம்மலாட்டத்தில் ஏதோ ஒரு வித்தியாசம் இருந்தது.

நிகழ்ச்சி முடிந்ததும் கிளம்பினார்கள். "இந்தப் பொம்மைகளை மரத்தில்தானே செய்திருக்காங்க?" என்று கேட்டான் ரஞ்சன்.

"ஆமாம். ஆனால் தோலினால்கூட இந்தப் பொம்மைகளைச் செய்வதுண்டு."

"திரைக்குப் பின்னாலே பதினஞ்சு பேராவது இருந்திருப்பாங்க இல்லையா?" என்று கேட்டான் ரஞ்சன்.

"ஒவ்வொரு பொம்மையையும் ஒருத்தர் ஆட்டி வைக்கிறார்ன்னு கணக்குப் போட்டிருக்கே இல்லையா? ஒருத்தரே ஒரே சமயத்தில் இரண்டு கைகளில் இரண்டு பொம்மைகளை இயக்குவாங்க. அது முடிஞ்சதும் வேற இரண்டு பொம்மைகளைக்கூட அவங்களே இயக்குவாங்க. பொதுவாக இரண்டு பேர்தான் இப்படி விரல்களில் கயிறுகளைக் கட்டிக்கொண்டு பொம்மைகளை ஆட வைப்பாங்க".

"ஆனால் ராமர், ராவணன், சீதை, அனுமார், லட்சுமணன் இப்படி நிறைய பேருக்குக் குரல் கொடுத்தாங்களே."

"பொதுவா பொம்மையை ஆட்டுவிப்பவர்தான் இப்படி பலவிதமாகக் குரல் கொடுப்பார். அப்போதுதான் அவர் சொல்வதற்கும், பொம்மை அசைவதற்கும் ஒத்துப் போகும்."

இதையெல்லாம் கேட்ட பிறகு பொம்மலாட்டத்தின் மீது ரஞ்சனுக்கு மதிப்பு மேலும் அதிகமானது.

பிறகு அவர்கள் அரங்கத்தை விட்டு வெளியே வந்தனர். ○






துளிகள்...

- பொம்மலாட்டக் கலை ஐந்தாம் நூற்றாண்டிலிருந்தே இருக்கும் ஒரு கலைதான்.
- பெரும்பாலும் ராமாயணத்தை அடிப்படையாகக் கொண்டுதான் பொம்மலாட்டம் நடத்தப்படுகிறது.
- கடவுள் வாழ்த்துக்குப் பிறகு கோமாளி அறிமுகமாவதும் உண்டு.
- பொம்மலாட்டத்தை பாவைக் கூத்து என்று தமிழ் இலக்கியம் குறிப்பிடுகிறது.
- மரத்தால் ஆனவை மரப்பாவைக் கூத்து. தோலால் ஆனவை தோற்பாவைக் கூத்து எனப்படுகிறது.
- தமிழகத்தில் உள்ள பொம்மலாட்டக் கலைஞர்களில் பலரும் மகாராஷ்டிரத்திலிருந்து வந்தவர்கள்.

குட்டீஸ் கோகுலம்

வண்ணம் தீட்டுங்கள்!

உங்கள் கைவண்ணத்தால் இங்குள்ள படத்தை வண்ணம் தீட்டி அழகுப்படுத்துங்க குட்டீஸ்!







ஏ.சார்லஸ்,
ஐந்தாம் வகுப்பு, எஸ்.ஆர்.எஃப்.வித்யாலயா மெட்ரிகுலேஷன் பள்ளி,
மணலி

ஆர்.சத்யா,
எட்டாம் வகுப்பு, கஸ்தூரிபா காந்தி பாலிகா
வித்யாலயா பள்ளி,
சின்னமதூர்






பி.ஜெயக்குமார்,
பத்தாம் வகுப்பு, காமராஜ் மேல்நிலைப் பள்ளி,
நம்பியூர்





நா.கோகுல்ராம்,
ஒன்பதாம் வகுப்பு,
வேதவல்லி வித்யாலயா,
வாலாஜாபேட்டை

ஈ.முகேஷ் ராஜன்,
ஐந்தாம் வகுப்பு,
சாரதா மெட்ரிகுலேஷன் பள்ளி.
செஞ்சி





ரா.ஸ்ரீநிதி,
ஆறாம் வகுப்பு,
த.ஆ.வே. பெல் பள்ளி,
இராணிப்பேட்டை

உங்கள் கைவண்ணம்!





முன்கதை: தங்கபுரி நாட்டை ஆளும் பொன்முகிலனின் மகன் தங்கமுகிலன். குருகுலத்தில் படிக்கிறான். நண்பன் கேசவனுடன் பழங்களைப் பறிக்க காட்டுக்குள் செல்கிறான். அதே குருகுலத்தில் படிக்கும் மாணிக்கத்தை அங்கே பார்க்கிறான். அருவியை நோக்கிச் செல்கிற மாணிக்கம், திடீரென மாயமாய் மறைந்துவிடுகிறான். இனி...

-தூரா

தொடர்கதை

''மு... முகிலா'' என்றபடி கேசவனின் கரம், முகிலனின் தோளைத் தொட்டது. அந்தக் கரம் மெதுவாக நடுங்குவதை முகிலன் உணர்ந்தான்.

''இத்தனை நாட்களாக மாணிக்கத்தை ஆத்திரக்காரன் என்று மட்டும்தான் நினைத்திருந்தேன். அவன் அபாயமானவன் என்பது இப்போது தெரிகிறது'' என்றான் முகிலன்,.

''நாம் அங்கே போய்ப் பார்ப்போமா?'' என்று கேட்டான் கேசவன்.

''வேண்டாம்! அது புத்திசாலித்தனமில்லை. இந்த விவகாரத்தை ஜாக்கிரதையாக அணுக வேண்டும். இங்கே பார்த்த காட்சி நம் இருவருக்குள் மட்டும் இருக்கட்டும். புரிகிறதா?'' என்றான் முகிலன்.

''சரி'' என்று தலையாட்டினான் கேசவன்.

இருவரும் பழங்களைப் பறித்துக்கொண்டு குருகுலத்தை நோக்கிச் சென்றனர்.



மாணிக்கம் சில நொடிகள் திகைத்துப் போனான். அருவியை நோக்கி வந்துகொண்டிருந்தவன், திடீரென சூறாவளியில் சிக்கியவன் போல் அந்தரத்தில் தூக்கப்பட்டான். பாறையை நோக்கி அம்பு போல் செல்வதைக் கண்டான்.

'போச்சு! பாறையில் மோதி உடல் சிதறப் போகிறது' என்று நினைத்து, கண்களை இறுக மூடிக் கொண்டான்.

நொடிகள் கரைந்தன. 'தொப்'பென தரையில் விழுவதை உணர்ந்து கண்களைத் திறந்தான். பாதி இருளும் பாதி வெளிச்சமும் கலந்த ஒரு குகையில் இருப்பது தெரிந்தது. தலையைத் திருப்பிச் சுற்றிலும் நோட்டமிட்டான். 'இது எந்த இடம்? எப்படி வந்தேன்?'

''என்ன மாணிக்கம், பயந்து விட்டாயா?'' என்று குரல் கேட்டது.

வாண்டுதாசன்

இருட்டைப் பிளந்துகொண்டு வருவதைப் போல் வந்து நின்றவன், ஏழடி உயரம் இருந்தான். கறுப்பு நிறத்தில் இருந்த ஒரு கனமான ஆடையை அணிந்திருந்தான். அது ஏதோ ஒரு மிருகத்தின் தோலாக இருக்க வேண்டும். கையில் ஒரு முழ நீளமுடைய கோலை வைத்திருந்தான். அதன் உச்சியில் வைரம் ஒன்று ஜொலித்தது.

மாணிக்கம் எழுந்து நின்றான். அந்த உருவத்தைக் கண்டு அவன் திகைக்கவோ, பயப்படவோ இல்லை. அதனால் ஏற்கெனவே அந்த மனிதனை, மாணிக்கம் சந்தித்து

இருக்கிறான் என்பது புரிந்தது.

''பயமெல்லாம் கிடையாது. திடீரென பாறையை நோக்கி இழுக்கப்பட்டதில் திணறிப்போனேன். எதற்காக என்னை வரச்சொன்னாய்?'' என்று கேட்டான் மாணிக்கம்.

''நான் உன்னிடம் ஒரு வேலையை ஒப்படைத்தது நினைவில் இருக்கிறதா?''

''இருக்கிறது.''

''சொல்லி ஒரு மாதம் ஓடிவிட்டது.''

''நான் ஒன்றும் சும்மா இல்லை. அதற்கான முயற்சிகளைச் செய்துகொண்டுதான் இருக்கிறேன். நேரம் சரியாக அமையவில்லை. மிகவும் ஜாக்கிரதையாகச் செய்ய வேண்டும். அகப்பட்டால் அவ்வளவுதான்.''

''புரிகிறது மாணிக்கம். எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் கிடைத்தால்தான் உபயோகமாகும்.''

''அதற்குத்தான் எனக்கு சில மந்திர வித்தைகளைக் கற்றுத் தரச் சொன்னேன். நீங்கள் அதைச் செய்யவேயில்லை'' என்றான் மாணிக்கம்.



விமலன்

அந்த மனிதன் சற்று நேரம் அமைதியாக இருந்தான். பிறகு ''சரி, கற்றுத் தருகிறேன். எச்சரிக்கையோடு பயன்படுத்து. ஆர்வக் கோளாறில் எதையாவது செய்து, ஏடாகூடமாக அகப்பட்டுக்கொள்ளாதே'' என்றான் அவன்.

அவன் சூரபத்ரன். மூன்று மாதங்களுக்கு முன்பு, முதன்முதலாக மாணிக்கத்தைச் சந்தித்தான். அந்த நாளின் நினைவுகள் மாணிக்கத்தின் மனத்தில் காட்சியாக விரிந்தது.

அன்று மாணிக்கத்துக்கு குருகுலத்தைச் சுற்றியுள்ள செடி, கொடிகளைச் சீர்செய்யும் வேலை. முட்களை வெட்டி வேலி அமைத்துக் கொண்டிருந்தபோது, தனக்குப் பின்னால் ஏதோ உருவம் செல்வதை உணர்ந்து திரும்பினான்.

காற்றைவிட வேகமாகச் சென்ற அந்த உருவம், குருகுலத்தின் பின்வாசலை அடைவதைக் கண்டான். சத்தம் காட்டாமல் மாணிக்கமும் அங்கே சென்றான்.

அந்த உருவம், அங்கிருந்த ஜன்னல் வழியாக உள்ளே எட்டிப் பார்த்தது. பிறகு மெதுவாக நகர்ந்து வாசலில் காலை வைத்தது. அடுத்தநொடி பின்னோக்கி தூக்கி வீசப்பட்டது. அது வீழ்ந்த இடத்தில்தான் மாணிக்கம் மறைந்து நின்றுகொண்டிருந்தான்.

இருவரும் எதிர்பாராத சந்திப்பில் அதிர்ந்தார்கள். அந்த உருவம், ''யார் நீ?'' என்று கேட்டது.

மாணிக்கம் தைரியத்துடன் பார்த்தான். ''நான் கேட்க வேண்டிய கேள்வி. எங்கள் குருகுலத்தில் திருட்டுத்தனமாக நுழைகிறாயே, நீ யார்?''

அவன் மெதுவாகச் சிரித்தான். ''என் பெயர் சூரபத்ரன். உன் பெயர்?''

''மாணிக்கம்.''

''வீரபத்ரனிடம் படிக்கிறாயோ?''

''ஆமாம்.''

''எப்படி இருக்கிறான் வீரபத்ரன்?'' என்று கேட்டான்.

குருவை அவன், இவன் என்று மரியாதையின்றிப் பேசுகிற சூரபத்ரனை வியப்பாகவும் கோபமாகவும் பார்த்தான் மாணிக்கம்.

''எங்கள் குருவை மரியாதையின்றிப் பேசுகிறாயே.''

''நான் ஏன் மரியாதை தர வேண்டும்? உங்களுக்குத்தான் அவன் குரு. நாட்டுக்கு மரியாதைக்குரிய பெரிய மனிதன்.

ஆனால், எனக்கு அவன் எதிரி. கூடிய சீக்கிரமே என் கையால் அழியப் போகிறான். அப்புறம் இந்த குருகுலமும் இருக்காது. நீங்கள் எல்லாம் படிப்பதற்கு வேறு ஆளைத் தேடிக் கொள்ளுங்கள்'' என்றான் சூரபத்ரன்.



தங்கமுகிலன்


''எ...என்ன சொல்கிறாய்?'' என்று பயத்துடன் கேட்டான் மாணிக்கம்.

''கூடிய சீக்கிரமே உன் குருநாதர் சொர்க்கலோகம் செல்லப் போகிறார். இதையெல்லாம் உன்னிடம் எதற்குச் சொல்கிறேன் தெரியுமா? என்னைக் கண்ணால் பார்த்து விட்டாய். ஆகவே, இனி நீ உயிரோடு இருக்கப் போவதில்லை'' என்ற சூரபத்ரன் தன் கையிலிருந்த சிறிய கோலை உயர்த்தினான்.

''இருங்கள்! இருங்கள்! அவசரப்பட வேண்டாம். என்னால் உங்களுக்கு ஆபத்து இல்லை. முடிந்தால் என்னை நீங்கள் பயன்படுத்திக்கொள்ளலாம். உங்களுக்கு வேண்டிய உதவியைச் செய்கிறேன்'' என்றான் மாணிக்கம்.

''தப்பிக்க நாடகமாடுகிறாயா?''

''நிச்சயமாக இல்லை. நான் சொல்வதைக் கேளுங்கள். என் தந்தை விமலன் அரசவை விதூஷகர். அதனால், பலர் என்னை கோமாளியின் மகனாகவே பார்க்கிறார்கள். கிண்டல் செய்கிறார்கள். அவர்களுக்குப் பாடம் புகட்ட ஆசை. நான் பெரியவனானதும் என்னைக் கண்டு நாடே மரியாதை செலுத்த வேண்டும்'' என்றான் மாணிக்கம்.



கேசவன்

சிரித்த சூரபத்ரன், ''சபாஷ்! பெரிய கனவோடுதான் இருக்கிறாய். ஆனால், கோமாளியின் மகனை பெரிய ஆளாக மாற விடமாட்டார்களே. உன் கனவை நான் நனவாக்குகிறேன். எனக்கும் உன்னைப் போல் ஒருவன் உதவி தேவைப்படுகிறது. நீயே பார்த்தாயல்லவா? ஏதோ ஒரு சக்தி என்னை உள்ளே போக விடாமல் தூக்கி வீசிவிட்டது'' என்றான்.

அதன் பிறகு அவர்கள் இரண்டு முறை சந்தித்தார்கள். சூரபத்ரன் மாணிக்கத்திடம் ஒரு பொறுப்பை ஒப்படைத்தான். நேற்று இரவு தூங்கிக்கொண்டிருக்கையில் மாணிக்கத்தின் மீது ஏதோ வந்து விழ, கண் விழித்துப் பார்த்தான். கல்லில் சுற்றப்பட்ட கடிதம். அதில் இன்று அருவிக் கரைக்கு வருமாறு எழுதியிருந்தது.

''நான் சொன்ன மந்திரங்களை நினைவில் வைத்துக்கொள். எச்சரிக்கையாகப் பயன்படுத்து. வேலையை சீக்கிரம் முடி. போய் வா'' என்றான் சூரபத்ரன்.

மீண்டும் சூறாவளி வீசியதைப்போல் உணர்வு. பாறையை ஊடுருவிக்கொண்டு வெளியே வந்து விழுந்தான் மாணிக்கம். எழுந்து உடம்பில் ஒட்டியிருந்த தூசியைத் தட்டி விட்டுக்கொண்டான்.

குருகுலத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தான். பத்தடிதான் நடந்திருப்பான்.

''மாணிக்கம்'' என்ற குரல் கேட்டுத் திரும்பியவன் அதிர்ந்தான்.

அங்கே அவனது தந்தை விமலன் நின்றிருந்தார்.

(தொடரும்)



ஹலோ குட்டீஸ்!

இந்த மாத மினி கோகுலம்
'வெற்றி மீது வெற்றி'. இது பரீட்சை நேரம்.
உங்களின் ஓராண்டுத் திறமையை நிரூபிக்கும் சமயம்.
எந்த ஒரு செயலுக்கும் திட்டமிடல் மிகவும் அவசியம். அந்த வகையில் தேர்வுக்கு உங்களைத் தயார்படுத்தும் வகையில் இந்த மினி கோகுலத்தை உங்களுக்கு அளிக்கிறோம்.

வழக்கம்போல், 37ஆம் பக்கத்திலிருந்து 44 ஆம் பக்கம் வரை தனியே பிரித்து எடுங்கள். அதை இரண்டாக மடித்துக் கத்தரியுங்கள். எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து ஸ்டேப்ளரைக் கொண்டு 'பின்' செய்யுங்கள். பதினாறு பக்க மினி கோகுலம் ரெடி!

தேர்வுக்கு உங்களை எப்படித் தயார்படுத்திக்கொள்வது என்பதில் தொடங்கி, தேர்வு அறையிலிருந்து நீங்கள் வெற்றி முகத்துடன் வெளியே வருகிற வரையிலான 'டிப்ஸ்' கொடுக்கப்பட்டுள்ளன. இது உங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்குமென நம்புகிறோம். தவிர, ஒரு அட்டவணையும் கொடுத்திருக்கிறோம். அதில் தேர்வு நாட்களைக் குறித்துக் கொள்ளுங்கள்.

இந்த ஐடியாவை எழுதியனுப்பியவர்: **கு.நித்யானந்தன் (உறுப்பினர் எண்:3), பிஷப் ஹீபர் மேல்நிலைப்பள்ளி, கொடாப்பு கிராமம்.**

இவருக்குப் பரிசாக ரூ.**50/-** வழங்கப்படுகிறது.

மினி கோகுலத்துக்கான ஐடியாவை நீங்களும் எழுதியனுப்பலாம்.
சிறந்த ஐடியாவுக்குப் பரிசு உண்டு!

அன்புடன்
ஆசிரியர்





தேர்வு அட்டவணை!

வ. எண்.	தேதி	தேர்வின் பெயர்

வெற்றிக்கு வாழ்த்துக்கள்!

இங்கே மடித்து கத்தரிக்கவும்

இங்கே பின் செய்யவும்

மினி

கோகுலம்

வெற்றி மீது வெற்றி!



தொகுப்பு : தேவி நாச்சியப்பன்

மகிழ்ச்சியும் வெற்றியும்!

எதிர்பார்த்த வினாக்கள் வர வில்லை என்றால், அழுது கலங்கி, விடைத்தாளைக் கண்ணீரால் நனைத்து, தெரிந்தவற்றையும் மறந்து, மயக்கம் போடும் மாணவர் கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழலில் தெரிந்தவற்றை எழுதுங்கள். எப்படி எழுதினாலும், 'இன்றைய தேர்வு முடிந்தது. நாளைய தேர்வுக்கு நல்ல முறையில் தயார் செய்வோம்' என்ற உறுதியுடன் படிக்கத் தொடங் குங்கள். வெற்றி நிச்சயம்!



கவனமும் குறிப்பும்!



உங்கள் பாடப் பகுதியில் கடின மானவை என்று நீங்கள் நினைக்கும் பகுதியைத் தனியே குறித்துக்கொள் ளுங்கள். ஆசிரியர்கள், பெற்றோர் கள், வகுப்பில் சிறப்பாகப் படிக்கும் மாணவர்கள் - இவர்களிடம் கேட் டுத் தெளிவு பெறுங்கள். 'நமக்கு இது புரியாது', 'நம்மால் முடியாது' என்ற மனநிலையை மனத்திலிருந்து அகற்றி கவனமாகக் கேட்டால், நிச் சயம் புரியும்!



சிவப்பு, பச்சை மைகளை விடைத்தாளில் பயன்படுத்தாதீர்கள். அவை ஆசிரியர் மற்றும் அதிகாரிகள் மட்டுமே பயன்படுத்தும் வண்ணங்கள். மற்ற வண்ணங்களில் விடைகளின் முக்கியமான பகுதிகளை அடிக் கோடிட்டுக் காட்டுங்கள். தலைப்புகளையும், பக்க எண்களையும் வண்ணத்தில் எழுதலாம்!

வண்ணமும் எண்ணமும்!

தியானமும் தெளிவும்!

அதிகாலை, படிப்பதற்கேற்ற அற்புதமான நேரம். காலைக் கடன்களை முடித்து, இரண்டு கிளாஸ் தண்ணீர் குடியுங்கள். கண்களை மூடி ஐந்து நிமிடம் மனத்தை ஒருநிலைப்படுத்தி (தியானித்து), பிறகு படியுங்கள். படித்தவை பசை போட்டு ஒட்டியதுபோல் மனத்திலே பதிந்துவிடும். நல்ல காற்றோட்டம், வெளிச்சம், சத்தமில்லாத அமைதியான இடமாகப் பார்த்து உட்கார்ந்து படியுங்கள்!





சீரான வேகத்தில் எழுதுங்கள். மெதுவாகவோ, அவசர அவசர மாகவோ எழுத வேண்டாம். சரியான நேரத்தைக் காட்டும் கைக்கடிகாரம் அணிந்து செல்லுங் கள். நேரத்தை அனுசரித்து எழு துங்கள். தெரிந்தவற்றை முதலி லும் தெரியாதவற்றைப் பிறகு, யோசித்தும் எழுதுங்கள். வினாக் கள் தேவையில்லை, விடைகளை மட்டும் எழுதுங்கள்!

வேகமும் விவேகமும்!

பாடமும் பிரிவும்!

படிக்கும்போது பக்கத்திலே ஒரு நோட்டுப் புத்தகம் வைத்திருங்கள். அதைப் பாடவாரியாகப் பத்து, பத்து பக்கங்கள் பிரித்துக்கொள்ளுங்கள். தமிழ், ஆங்கிலம், கணிதம் எனப் பிரித்த நோட்டுப் புத்தகத்தில், அந் தந்தப் பாடத்தில் உள்ள புதிய சொற் கள், மறந்து போகும் பகுதிகளைக் குறித்துக்கொள்ளுங்கள். பேருந்துப் பயணம், இடைவேளை, சாப்பிடும் போது, அந்தப் பகுதிகளை மனதுக் குள் சொல்லிப் பார்க்கலாம். நினை வுக்கு வரவில்லையெனில், உடனே நோட்டைப் பிரித்துப் பார்க்கலாம்!



சீரும் சிறப்பும்!



வினாத்தாளை வாங்கியதும், உங்கள் பதிவு எண்ணை அதில் எழுதுங்கள். பிறகு, விடைத் தாளில் உங்கள் பதிவு எண், பாடம், தேதி போன்றவற்றை அடித்தல், திருத்தலின்றி உரிய இடத்தில் அழகாகத் தெளிவாக எழுதுங்கள். நான்கு பக்கங்களிலும் சமமான மார்ஜின் போடுங்கள். வினாக் களைச் சரியாகப் படியுங்கள். சாய்ஸ் எவ்வளவு என்பதைப் பார்த்து, அதற்கேற்ப எழுதுங்கள்.

உணவும் தெம்பும்!

பசியோடு படிப்பது, வயிறு முட்டச் சாப்பிட்ட பிறகு படிப்பது இரண்டுமே தவறு. மிதமாகச் சாப் பிடுங்கள். டீ, காப்பி குடித்தால் சுறு சுறுப்பு வரும் என எண்ணுகிறோம். ஆனால், வெதுவெதுப்பான நீரில் எலுமிச்சைச் சாறு பிழிந்து, நாட்டுச் சர்க்கரை கலந்து குடித்துப் பாருங் கள். குளுக்கோஸ் போல் புதிய தெம்பு கிடைக்கும். மந்தத்தை ஏற் படுத்தும் நொறுக்குத் தீனி, எண் ணெய்ப் பலகாரங்களைத் தவிர்ப் பது நல்லது!





தெரியட்டும் தெளிவும்!

தேர்வு தொடங்குவதற்கு ஒரு மணி நேரம் முன்னதாகவே பள்ளிக்குச் சென்றுவிடுங்கள். முதல்நாளே மிதிவண்டியில் காற்றுள்ளதா, பிரேக் பிடிக்கிறதா எனச் சரி பாருங்கள். பேனா, பென்சில் போன்றவை ஒன்றுக்கு மூன்றாக இருக்கட்டும். பள்ளிக்குச் சென்றதும் அமைதியாக அமர்ந்து படித்தவற்றை நினைவு படுத்திப் பாருங்கள். 'அதைப் பார்த்தாயா? இதைப் படித்தாயா?' என்று சிலர் கேட்பதை, அந்த நேரத்தில் பதற்றத்துடன் படிக்காதீர்கள்!

திட்டமும் செயலும்!



தேர்வு அட்டவணையைக் கையில் வைத்துக்கொள்ளுங்கள். இடையே வரும் விடுமுறை நாட்களைக் குறித்துக்கொள்ளுங்கள். அதன் அடிப்படையில், ஒரு கால அட்டவணை (Time Table) தயாரித்துக்கொள்ளுங்கள். எப்பொழுது, எந்தப் பாடத்தில், எந்தப் பகுதி படிக்க வேண்டும் எனத் திட்டமிடுங்கள். திட்டமிட்டதை ஒத்திப் போடாமல் படித்து முடியுங்கள்!

படிப்பும் ஓய்வும்!



தேர்வு நெருங்கிவிட்டது. உண்மைதான். அதற்காகத் தூங்குகிற, சாப்பிடுகிற நேரம் தவிர, மற்ற நேரமெல்லாம் தொடர்ந்து படிக்க வேண்டியதில்லை. இரண்டு மணி நேரம் படியுங்கள். பிறகு கால் மணி நேரம் வெளியே உலா வாருங்கள். பசுமையான மரம், செடி, கொடிகள், பறவைகள் போன்ற இயற்கை அழகை ரசியுங்கள். சற்று நேரம் கண்களை மூடி, கண் இமைகளின் மீது ஈரத் துணியை வைத்துக்கொள்ளுங்கள்; சோர்வு நீங்கும்!

கற்றலும் கேட்டலும்!

இருவர், மூவராகச் சேர்ந்து படிக்கலாம். ஆனால், விளையாட்டு, வீண் பேச்சு போன்றவற்றை ஒதுக்கிவிட வேண்டும். அந்தக் குழுவில் யார், எந்தப் பாடத்தில் சிறப்பாகப் படிப்பவரோ, அவரை அந்த நாளின் லீடராக்கி, புரியாத பகுதியை விளக்கிச் சொல்லும்படிக் கேளுங்கள். கற்றலுக்கு அடிப்படை கேட்டல். கேட்பவை அப்படியே மனத்தில் பதியும்!



பயிற்சியும் பிழையும்!



எழுத்துப் பயிற்சி மிக மிக அவசியம். மனப்பாடப் பகுதி, சூத்திரங்கள், கோட்பாடுகள், விதிகள், குறியீடுகள் போன்றவற்றை எழுதி எழுதிப் பழக வேண்டும். பிழைகள் நீங்குவதுடன், கையெழுத்தும் தெளிவு பெறும். பிறகு தூக்கத்தில் எழுப்பிக் கேட்டாலும் உங்களால் சரியாக பதில் சொல்ல முடியும்!

வினாவும் விடையும்!



கடந்த நான்கு, ஐந்து ஆண்டுகளுக்கான பொதுத்தேர்வு வினாத்தாள்களைச் சேகரித்திருப்பீர்கள். அவற்றுள் ஒன்றிரண்டை பொதுத்தேர்வு எழுதுவது போலக் கற்பனை செய்துகொண்டு எழுதிப் பாருங்கள். குறித்த நேரத்துக்குள், குறித்த வேகத்தில் முடிக்க இது ஒரு பயிற்சியாக அமையும். அத்துடன் அந்த விடைத்தாளைப் புத்தகத்தின் உதவியுடன் நீங்களே திருத்திப் பார்க்கலாம்!

லப்...டப்... லென்னக்!





* மருத்துவமனையில் லென்னக்...





* அன்றைய ஸ்டெத்தோஸ்கோப்கள்

ஹலோ, கோகுலம் குட்டீஸ்! நலம்தானே? டாக்டர்களின் அடையாளமான 'ஸ்டெத்தாஸ்கோப்'பைக் கண்டுபிடித்தவர் 'ரெனே தியோபில் ஹையாசிந்த் லென்னக் (Rene Theophile Hyacinthe Laennec)

இவர் ஒரு ஃபிரெஞ்சு மருத்துவர். 1781ல் பிரிட்டானி மாவட்டத்தில் 'குயிம்பர்' எனும் ஊரில் பிறந்தார். இவருடைய ஐந்து வயதில் அம்மா காசநோயில் இறந்துவிட்டார். அதனால் தாய்மாமா கவனிப்பில் வளர்ந்து வந்தார். மாமா ஒரு டாக்டர் என்பதால், அவரும் டாக்டரானார்.

அந்தக் காலத்தில் டாக்டர்களுக்கு நோயாளியின் இதயத் துடிப்பைத் தெரிந்துகொள்ள கருவி இல்லை. நோயாளியின். நெஞ்சில் காதை வைத்துக் கேட்பார்கள். அப்போது கேட்கும் இதய ஒலிகளை வைத்து நோயைக் கண்டுபிடிப்பார்கள். மிகவும் குண்டாக இருக்கும் நோயாளிகளின் நெஞ்சில் என்னதான் காதை அழுத்திக் கேட்டாலும் இதயத் துடிப்பு சரியாக கேட்காது. இது டாக்டர்களுக்கு இடையூறாக இருந்தது. இந்

டாக்டர்.கு.கணேசன்



தச் சூழலில், இதயத் துடிப்பை அறிய ஒரு நாகரீகமான முறையைக் கண்டுபிடிக்க முற்பட்டார், லென்னக்.

அது 1816 செப்டம்பர் மாதத்தில் ஓர் இளங் காலைப் பொழுது, லென்னக், பாரிஸ் நகரில் 'வீ லோவர் அரண்மனை'யைச் சுற்றி இருந்த முற்றத்தில் நடை பயின்று கொண்டிருந்தார்.

அப்போது இரண்டு சிறுவர்கள் ஒரு நீளமான மரத்துண்டை வைத்து விளையாடிக்கொண்டிருந்தனர். ஒரு குழந்தை அந்த மரத் துண்டின் ஒரு முனையைக் குண்டூசியால் கீறியது. வேறொரு குழந்தை மரத் துண்டின் மறுமுனையைத் தன் காதில் வைத்துக் கேட்டுக்கொண்டிருந்தது. முதல் குழந்தை குண்டூசியால் கீறும்போது உண்டாகும் ஒலியைத் தன் காதில் கேட்டுக் குதூகலித்தது அடுத்த குழந்தை. இந்த விளையாட்டைப் பார்த்த லென்னக் சந்தோஷத்தில் துள்ளிக் குதித்தார்.

"அடடே, இதே முறையை இதயத் துடிப்பைக் கேட்கவும் பயன்படுத்தலாமே!" என்று யோசித்தார். அதை தம்மிடம் வந்த கொழுத்த நோயாளியிடம் பரிசோதித்தார்.

ஒரு நீண்ட பேப்பரை பல மடிப்புகளாக மடித்து உருளை மாதிரி செய்தார். இரண்டடி நீளம் இருந்த அந்தக் குறுகிய உருளையின் திறந்த ஒரு பக்கத்தை நோயாளியின் நெஞ்சிலும், மறுபக்கத்தை தம்முடைய காதிலும் பொருத்திக் கேட்டார். என்ன ஆச்சர்யம்! நேரடியாக நோயாளியின் நெஞ்சில் காதை வைத்துக் கேட்பதை விட இந்தப் பேப்பர் உருளையில், பல மடங்கு துல்லியமாக இதயத்தின் 'லப்,டப்' ஒலிகள் கேட்டன. லென்னக் அன்று உருளையாக சுருட்டிய பேப்பர்தான் உலகம் கண்ட முதல் ஸ்டெத்தாஸ்கோப்!

* ஸ்டெத்தாஸ்கோப்





* மோனல்ஸ்டெ ஸ்கோப்

உருளைக்குள் இருக்கும் காற்று, ஒலி அலைகளைப் பெருக்கி, ஒருங்கிணைத்து அனுப்புவதால், அந்த ஒலிகளைத் துல்லியமாகக் கேட்க முடிகிறது. இதுதான் ஸ்டெத்தாஸ்கோப்பின் அடிப்படை தத்துவம்.

கிரேக்க மொழியில்

மருத்துவ மேதைகள் - சுஸ்ருதா

இவர் 'அறுவை மருத்துவத்தின் தந்தை' என்று அழைக்கப்படும் பண்டைக் கால இந்திய மருத்துவர். கி.மு. ஆறாம் நூற்றாண்டில் வட இந்தியாவில் கங்கைக் கரை ஓரத்தில், தற்போது வாரணாசி என்று அழைக்கப்படும் பகுதியில், பிறந்து வளர்ந்தவர். இவர் எழுதியுள்ள 'சுஸ்ருத சம்ஹிதை' எனும் மருத்துவ நூல் அறுவை சிகிச்சையின் முதல் நூலாக அறியப்படுகிறது. இந்த நூலில் அவர் 120 அறுவை சிகிச்சைக் கருவிகள் மற்றும்

'ஸ்டெத்தாஸ்' என்றால் 'மார்பு' என்றும் 'ஸ்கோப்' என்றால் 'பெருக்கி' என்றும் பொருள். அதாவது 'மார்பு ஒலியைப் பெருக்கிக் காட்டும் கருவி' என்று பொருள்.

லென்னக் அதன்பின்பு பற்பல பொருள்களால் உருளைகளை உருவாக்கிப் பரிசோதித்தார். 1819ல் மூன்றரை

பல பொருள்களால் தயாரிக்கப்படுகிறது. என்றாலும் லென்னக் கண்டுபிடித்த அடிப்படை விஷயம் மாறவேயில்லை. இன்றைக்கும் ஸ்டெத்தாஸ்கோப் ஒவ்வொன்றும் லென்னக் பெயரை நினைவுபடுத்திக்கொண்டிருக்கிறது.

சரி குட்டீஸ்! விலங்குகளுக்கு

300க்கும் மேற்பட்ட நோய்களுக்குத் தீர்வு தரும் அறுவை சிகிச்சை முறைகளைக் குறிப்பிட்டுள்ளார். மேலும் ஆயுர்வேதம், விருத்த த்ரையம் ஆகிய மருத்துவ முறைகள் பற்றிய குறிப்புகளும் இந்த நூலில் உள்ளன. மருந்துகள் மூலம் குணமாகாத நோய்களுக்கு, உடலில் தேவையின்றி சேர்ந்திருக்கும் நீரையும் சீழையும் வெளியேற்றுதல், கெட்டுப்போன சதைகளை வெட்டி எடுத்தல் ஆகியவற்றின் மூலம் சிகிச்சை அளித்து வெற்றி கண்ட முதல் இந்திய மருத்துவர். அறுவை சிகிச்சைக் கருவிகளை



நெருப்பில் வாட்டி பதப்படுத்தும் முறையினை முதன்முதலில் செயல்படுத்தியவரும் இவரே. தற்போது 'பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை' என்று வர்ணிக்கப்படும் ஒட்டறுவை சிகிச்சையினை அந்தக் காலத்திலேயே நிறையச் செய்துள்ளார்.

முக்கியமாக, விபத்தில் அல்லது சண்டையில் மூக்கை இழந்தவர்களுக்கு நெற்றிப் பகுதியிலிருந்து தோலை எடுத்து மூக்கில் ஒட்ட வைத்து மூக்கின் வடிவத்தையும் அழகையும் சரி செய்து சாதனை படைத்துள்ளார்!

செ.மீ. விட்டமும் இருபத்தி ஐந்து செ.மீ நீளமும் கொண்ட மரத்தால் ஆன, ஒரு காதை மட்டுமே வைத்து கேட்கக்கூடிய ஸ்டெத்தாஸ்கோப் செய்தார். இதுதான் மருத்துவ உலகம் ஏற்றுக்கொண்ட முதல் ஸ்டெத்தாஸ்கோப்!

அதற்குப் பிறகு ஸ்டெத்தாஸ்கோப் பல பரிமாணங்களை எடுத்தது. 1843ல் இரு காதுகளை வைத்துக் கேட்கும் ஸ்டெத்தாஸ்கோப் உருவானது. 1894ல் பித்தளை, எஃகு போன்ற உலோகங்களால் ஸ்டெத்தாஸ்கோப் உருவானது. எவர்சில்வர், ரப்பர், பி.வி.சி போன்ற

ஸ்டெத்தாஸ்கோப் உண்டா, இல்லையா? உண்டு! அதன் பெயர் 'ஃபோனன்டோஸ்கோப்' (Phonendo-scope). இது மனித ஸ்டெத்தாஸ்கோப்பை விட நீளமாக இருக்கும். கனமான உலோகத்தால் செய்யப்பட்டிருக்கும். விலங்குகளின் உடலில் உள்ள ரோமங்களைத் தாண்டி இதய ஒலிகள் துல்லியமாகக் கேட்க வேண்டும் என்பதற்காக இந்தச் சிறப்பு ஏற்பாடு.

அடுத்த மாதம் உலகின் முதல் 'ஆன்டிபயாடிக்' என்று பெயர் பெற்ற 'பென்சிலின்' மருந்து பற்றி பார்ப்போமா?

உயர்ந்த பொருள்!



ஒருமுறை சத்ரபதி சிவாஜியின் முன்பு அவருடைய வீரர்கள் ஓர் ஆளைக் கொண்டு வந்து நிறுத்தினார்கள். உடையையும் தோற்றத்தையும் பார்த்ததும் அவர் ஒரு முஸ்லீம் என்று தெரிந்தது. கையில் சிறிய துணி மூட்டை.

''என்ன விஷயம்?'' வினவினார் சிவாஜி.

''மன்னரே! விடியற்காலையில் நாங்கள் பார்க்கும்போது இவன் பூட்டிய ஒரு வீட்டுத் திண்ணையிலே உட்கார்ந்துகொண்டிருந்தான். எங்களைப் பார்த்ததும் இதோ கையில் வைத்திருக்கிறானே சிறிய துணிமூட்டை, அதை எடுத்துக் கொண்டு வேகமாக ஓட ஆரம்பித்தான். கஷ்டப்பட்டு இவனைப் பிடித்தோம். மூட்டையில் இருப்பதைக் காண்பிக்க மறுக்கிறான்'' என்றான் ஒரு வீரன்.

''ஆம் அரசே! மூட்டையில் வைத்திருப்பது இவன் சொந்தப் பொருளா அல்லது திருடிய பொருளா என்று எங்களுக்குச் சந்தேகமாக இருக்கிறது'' என்றான் இன்னொரு வீரன்.

சிவாஜி அவன் முகத்தைக் கூர்ந்து நோக்கினார்.

''சகோதரனே! மூட்டைக்குள் இருப்பது உன் சொந்தப் பொருளா?''

''ஆம் அரசே!''

''மிகவும் விலையுயர்ந்த தங்கம், வைரம் இதில் உள்ளதா?''

''அவற்றைவிட உயர்ந்தது''

''அதனால்தான் உடும்பு மாதிரி மூட்டையை பிடித்துக் கொண்டிருக்கிறாயா?''

''மன்னரே! என் உயிரினும் மேலான பொருள். இதற்காக நான் உயிரையும் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்.''

சிவாஜிக்குப் புரிந்துவிட்டது. புதிய பட்டுத் துணி ஒன்றைக் கொண்டு வரும்படி உத்தரவிட்டார். சில நொடிகளில் வந்து சேர்ந்தது. பளபளக்கும் பட்டுத் துணியை அவனிடம் கொடுத்து, ''சகோதரனே! நீ உயர்ந்ததாக நினைப்பதை இதில் பத்திரப்படுத்தி வைத்துக் கொள்!'' என்றார்.



த.ஜானகி

இதைச் சற்றும் எதிர்பாராத அந்த இளைஞன், தன் மூட்டையைப் பிரித்து அதில் உள்ள ஓலைச்சுவடிகளைப் பட்டுத் துணியில் பத்திரப்படுத்திக்கொண்டான்.

''மன்னரே! இவனுடைய மத சம் பந்தமான நூல் இது. இவன் ஒரு இஸ்லா மியன்'' என்று கூறினார் அவையில் இருந்த ஒருவர்.

''தெரியும். ஒவ்வொருவருக்கும் அவர் மத சம்பந்தமான நூல் மதிப்புக்கும் வணக்கத்துக்கும் உரியது. தன் மதத்தின் மீது உண்மையான அன்பும் மரியாதை யும் வைத்திருப்பவன் மற்ற மதத்தையும் மதிப்பான். என் அன்னை பவானி மீது நான் உண்மையான பற்றுக் கொண் டவன். ஆதலால், இந்த சகோதரனின் மதம் சம்பந்தமான புனித நூலுக்கு மதிப்பளிக்கிறேன். இவனை இனி யாரும் தொந்தரவு செய்யாதீர்கள்'' என் றார்.

நடுங்கிக்கொண்டிருந்தவன், சிவாஜி யின் பெருந்தன்மையைக் கண்டு திகைத் தான். 'ஔரங்கசீப்பின் பேச்சைக் கேட்டு, தங்கக் காசுகளுக்கு ஆசைப்பட்டு இவ ரையா கொலை செய்ய டில்லியிலிருந்து வந்தேன்? கூடாது! இவரை நான் மதிக்கிறேன். அல்லாவின் அருளால் இவர் பல ஆண்டுகள் வாழட்டும்' மனத் துக்குள் கூறிக் கொண்டான். சிவா ஜியை வணங்கிவிட்டு, புதிய மனித னாக அவ்விடத்தை விட்டுச் செல் லலானான்.



கிளியோபட்ரா ஊசி!

ஊசிமுனை போன்ற நீளமான தூண்கள் 'கிளியோபட்ரா ஊசி' எனப்படுகின்றன. இதற்கும் கிளியோபட்ராவுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. 'மூன்றாம் தூட்டுமோஸ்' என்பவர் எகிப்திய நகரமான ஹீலியோபோலிஸில் கி.பி.1450ல் உருவாக்கினார்.

தற்போது மூன்று கிளியோபட்ரா ஊசிகள் முறையே இலண்டன், பாரிஸ் மற்றும் நியூயார்க்கில் உள்ளன. இவை சிவபபு கிரானைட் கற்களால் ஆனவை. உயரம் 68 அடி, எடை சுமார் 180 டன்கள் வரை இருக்கும்.

கி.மு.12ல் கிளியோபட்ரா, மார்க் ஆன்டனிக்காகக் கட்டிய கோயிலுக்கு இந்தத் தூண்களை

டிரைடன்!

'மனிதன் பாதி மிருகம் பாதி' என்று சொல்வார்கள். 'டிரைடன்' எனக் குறிப்பிடப்படுபவர் மனிதன் பாதி மீன் பாதி. இவர் கிரேக்கப் புராணக் கதைகளில் இடம் பெற்றுள்ளார். இவரின் தந்தையார் 'போஸிடான்'. இவர் கடலின் கடவுள். தாயார் பெயர் 'அம்ஹிரிட்டி.' டிரைடன் கடலுக்கு அடியில் தங்கக் கோட்டை கட்டி அதில் வசிப்பதாக கதைகள் உண்டு. ரோமானியப் புராணக் கதைகளிலும் டிரைடன் இடம் பெற்றுள்ளார்.



டிரைடன் போன்ற உருவங்களைக் கண்டுபிடித்துள்ளதாகவும் பலர் கூறுகின்றனர். நெப்டியூன் கோளின் மிகப் பெரிய நிலவுக்கு 'டிரைடன்' என்னும் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

முனைவர் ஆசுரா

பொம்மை மரங்கள்!

தமிழக வீர வரலாற்றோடு தொடர்புடையது 'நடு கல்'. அதேபோல வட அமெரிக்க சமூக நிகழ்வோடு தொடர்புடையது தான் 'டோட்டம் நடு மரம்' (Totem Poe). பெரிய மரங்களைச் செதுக்கிக் குடைந்து



ரோமானியர்கள் எடுத்துச் சென்றதாகக் குறிப்புகள் உள்ளன.

இலண்டனில் அமைக்கப்பட்டுள்ள கிளியோபட்ரா ஊசியை முகமது அலி, 'லார்டு நெல்சன்' அவர்களுக்கு 1819 ஆம் ஆண்டு வழங்கினார். இது இலண்டன், வெஸ்ட் மினிஸ்டர் பகுதியில் உள்ளது. பிரான்சு நாட்டின் பாரிஸில் 'லா கன் கோர்ட்' என்னும் இடத்திலும் 'கிளி யோபட்ரா ஊசி' தூண் அமைக்கப்பட்டுள்ளது. எகிப்திய வைஸ்ராய் முகம்மது அலி 1826 ஆம் ஆண்டு மன்னர் லூயிஸ் ஃபிலிப்புக்கு வழங்கினார்.

அமெரிக்காவின் நியூயார்க் நகரின் மத்திய பூங்காவிலும் கிளி யோபட்ரா ஊசி அமைக்கப்பட்டுள்ளது.

பல்வேறு உருவங்களை உருவாக்குவார்கள். பொதுவாக 'சிடார்' மரங்கள் இதற்குப் பயன்படுகின்றன. 1800 ஆண்டுகளுக்கு முந்தைய டோட்டம் நடு மரங்கள் கண்டு பிடிக்கப்பட்டன.

வீட்டுக்கு முன்னால் அமைக்கப்படும் 'டோட்டம் நடு மரங்கள்' அந்தக் குடும்பத்தின் பெருமையைப் பறை சாற்றுவதாக இருக்கும். சில டோட்டம் நடு மரங்கள் பண்டைய பெருமையைச் சொல்வதாகவும், வீரர்களைப் பற்றியதாகவும், முக்கிய சம்பவங்களை உணர்த்துவதாகவும் இருக்கும். பிறரைக் கேலி செய்வதற்காக அமைக்கப்பட்ட டோட்டம் மரங்களும் உண்டு.

பிரிட்டிஷ் கொலம்பிய பல்கலைக் கழகத்தில் டோட்டம் நடுமர அருங்காட்சியகம் உள்ளது. உலகிலேயே மிகப் பெரிய 'டோட்டம் நடுமரம்' 'அலர்ட் ...ரே' என்னுமிடத்தில் உள்ளது. இது 173 அடி ...யரம் கொண்டது.



குறிஞ்சிப்பாடி, மலைச் சாரலிலுள்ள ஓர் ஊர். அங்கு வான்ளாவிய மரங்களடர்ந்து இருந்ததால் மக்கள் நடமாட்டம் அதிகம் இல்லை. ஆங்காங்கே குடியிருக்கும் மக்கள் தங்கள் குழந்தைகளை ஒன்று சேர்த்து குருநாதர் ஒருவரிடம் ஒப்படைத்திருந்தனர். குருகுலம் முறையில் கல்வி கற்றுக் கொடுத்தார் குருநாதர்.

குருகுலத்தைச் சுற்றி சுமார் இரண்டு கல் தொலைவில் உள்ள குழந் தைகள் கல்வி கற்று வந்தனர். அடர்ந்த கொன்றை, பின்னிப் பிணைந்த முல்லை போன்ற பல கொடிகள், குறுக்கே செல்லும் காட்டாறுகள், எதிர்கொள்ளும் காட்டு விலங்குகள், பறவைகளின் பல்வேறு ஒலிகள், இவற்றைத் துணிச்சலுடன் குழந்தைகள் எதிர்கொண்டு குருகுலம் செல்வர்.

சில குழந்தைகளை அவர்களது தந்தை அல்லது உறவினர் அழைத்து வந்து, மீண்டும் அழைத்துச் சென்றனர். அப்பகுதியில் வாழ்ந்த இலட்சுமியின் கணவர் மகாதேவன் சிற்ப வேலைகளில் சிறந் தவர். சிற்பங்கள் செதுக்கும் பணிக்காக பல ஊர்களுக்கும் செல்வார்.

இலட்சுமி தனது வீட்டின் அருகில் பல வண்ணப் பூக்கள் மலரும் நந்தவனத்தை உருவாக்கி இருந்தாள். அந்த நந்தவனத்தின் நடு





நெடுங்கதை

துணைக்கு வந்த தோழன்!

இரா.மனோன்மணி

வில் கணவன் செதுக்கிய கண்ணன் சிலையை சிறிய பீடத்தில் வைத்து தினமும் வழிபடுவாள். வண்ண வண்ணப் பூக்களை தேர்ந்தெடுத்து மாலை தொடுத்து கண்ணனுக்கு சூட்டுவாள். பின்னர் மலர்களை சேகரித்து மாலையாய் தொடுத்து வைப்பாள். தேவையானவர்கள் வந்து அவளிடம் வாங்கிச் செல்வார்கள்.

இலட்சுமியின் மகன் இன்பசேகரன் பள்ளியில் சேர்க்கும் பருவத்தை அடைந்தான். அவனை குருகுலத்தில் ஒப்படைத்தாள். அங்கே செல்லும்போதும் திரும்பும் போதும் காட்டாறு, ஒற்றையடிப் பாதைகள், மரங்கள், செடி கொடிகளடர்ந்த பகுதிகளை எப்படிக் கடப்பது என்று சொல்லிக்கொண்டே வந்தாள்.

மறுநாள் அவனைக் காட்டாறு வரை அழைத்து வந்து வழியனுப்பினாள். இன்பசேகரன் தனியே செல்ல பயந்தான். ''அஞ்சாதே! பயம் வந்தால் 'மதுசூதனா' என்று அழை! இறைவன் துணைக்கு வருவான்'' என்று சொல்லிவிட்டு வீட்டை நோக்கிச் சென்றுவிட்டாள்.

இன்பசேகரன் தாயின் சொல்லை



நம்பி நடக்க ஆரம்பித்தான். சிறிது தூரம் சென்றதும், மரத்தில் தொங்கிய மலைப் பாம்பைக் கண்டான். 'மதுசூதனா' என்று பலமுறை சப்தம் எழுப்பினான். புன்னகை பூத்த முகத்துடன் அவன் வயதுடைய ஒருவன் எதிரில் வருவதைப் பார்த்துப் பூரித்துப் போனான். இருவரும் நீண்ட காலம் பழகியவர்களைப் போல பேசிக் கொண்டே நடந்தனர்.

குருகுலத்தின் வாயிலை அடைந்ததும், ''மீண்டும் நீ அழைத்தால் வருவேன்'' என்று கூறிக் கிளம்பினான் புதுத் தோழன்.

பாடம் முடிந்து வீடு திரும்புகையில் மீண்டும் 'மதுசூதனா' என்று அழைத்தான். மதுசூதனன் வந்ததும் இருவரும் கை கோர்த்தனர். ஆடினர்! பாடினர்! காட்டாறு கடந்ததும் மதுசூதனன் பிரிந்தான். இன்பசேகரன் வீடு சென்றான். தாய் விபரம் கேட்டாள். ''நீ சொன்ன மதுசூதனன்தானம்மா துணைக்கு வந்தான்'' என்றான்.

'நாம் சொன்னதற்கேற்றாற்போல் பதில் சொல்கிறான்' எப்படியோ மகன் தன்னைத் தொந்தரவு செய்யாது, தினமும் சென்று கல்வி கற்று வரட்டும்' என நினைத்தாள்.

காட்டாறு வரை தாய் வந்து வழியனுப்புவதும் காட்டாற்றைக் கடந்ததும், மதுசூதனன் துணைக்கு வருவதும், குருகுல வாசலில் இருவரும் பிரிவதும், பாடம் முடிந்ததும், குரல் கொடுத்துக் கூப்பிட்டு, சேர்ந்து நடப்பதுமான நடைமுறையால் இன்பசேகரன் நிம்மதியாகப் படித்து வந்தான்.

குருகுலத்தில், கலைமகளின் திருவிழாவை ஆசிரியரும் மாணவர்களும் விருந்துடன் கொண்டாட நிர்மானித்தார்கள். மாணவர்கள், அரிசி, பருப்பு, காய்கறி, பழங்கள் என்று ஒவ்வொரு பொறுப்பு எடுத்தனர். எஞ்சியது தயிர் ஒன்றுதான். அதைக் கொண்டு வரும்படி இன்பசேகரனைக் கேட்டுக் கொண்டனர். சம்மதித்த இன்பசேகரன்



தன் தாயாரைக் கேட்டான்.

தாயார், ''சரி'' என்றாள். இறைவன் தம் சோதனையை ஆரம்பித்தான். பால், தயிர் கிடைக்காதவாறு மந்திரம் செய்தான். வருந்திய தன் தாயைத் தேற்றி விட்டுக் குருகுலத்தை நோக்கிச் சென்றான் இன்பசேகரன்.

வழக்கம்போல் நண்பன் மதுசூதனனை அழைத்தான். அவனிடம் குருநாதர் இல்லத்தில் நடைபெறும் விழாவைப் பற்றியும் தயிர் கிடைக்காமற் போனதைப் பற்றியும் கூறினான்.

மதுசூதனன் சிரித்தான். ''இவ்வளவு தானே! தயிர் நான் தருகிறேன்'' என்று கூறிப் பிரிந்தான். சற்று நேரம் கழித்து திரும்பிய மதுசூதனன், இன்பசேகரனின் சிறு கரத்துக்குள் அடங்கும் செப்பு பாத்திரத்தில் தயிரைக் கொடுத்தான். மகிழ்வுடன் பெற்றுக்கொண்ட இன்பசேகரன் குருநாதர் இல்லம் அடைந்தான்.

முப்பது பேர் சாப்பிட வேண்டிய பந்திக்கு, சிறு கைக்குள் அடங்கும் பாத்திரத்தில் தயிர் கொண்டு வந்திருப்பதைப் பார்த்து மாணவர்கள் சிரித்தனர்.

விருந்து படைப்பவர் ''இந்தத் தயிரை மோராக்கிச் சிலருக்காவது பரிமாறலாம்'' என்று கூறிச் சற்றுப் பெரிய பாத்திரத்தில் ஊற்றினார். பிறகு நிமிர்த்தினால் பாத்திரம் நிறையத் தயிர் இருந்தது. மீண்டும் ஊற்றினார். பெரிய பாத்திரம் நிறையும்வரை ஊற்ற ஊற்ற செம்பில் தயிர் நிறைந்துக்கொண்டே இருந்தது. இந்த அதிசயத்தைப் பார்த்து அனைவரும் வியப்பில் ஆழ்ந்தனர்.

பெரிய பெரிய அண்டாக்களைத் தயிரால் நிரப்பினர். ''இதுவரை கண்டிராத சுவையும் மணமும் மிகுந்த இந்த தயிர் எப்படி கிடைத்தது?'' என்று கேட்டார் குருநாதர். இன்பசேகரன் விபரம் சொன்னான்.

''அப்படியானால் அந்த மதுசூதனனை நானும் காண வேண்டும்'' என்றார். இன்பசேகரன் சம்மதித்தான்.

விழா முடிந்ததும் இன்பசேகரனுடன் குருநாதரும் உதவியாளர் சிலரும் சென்றனர். வழக்கமான இடத்தில் நண்பனைக் கூவி அழைத்தான். மதுசூதனன் வந்தான். கையைப் பற்றி சிரித்தான்.

தன் மாணவன் தானே சிரிப்பதையும், கையை நீட்டுவதையும் கண்ட ஆசிரியர் விபரம் கேட்டார். மதுசூதனன் வந்திருப்பதைக் கூறிய



"அஞ்சாதே! பயம் வந்தால் மதுசூதனா என்று அழை! இறைவன் துணைக்கு வருவான்"



பரிசுப் பெட்டி!

இந்தப் பெட்டிக்குள் அறிவியல் மேதைகள் அல்லது தேசத் தலைவர்கள் பற்றிய சுவையான விஷயத்தை எழுதியனுப்புங்கள். உங்கள் பெயர், பள்ளி மற்றும் வீட்டு முகவரியைத் தனித்தாளில் தெளிவாக குறிப்பிடுங்கள். பிரசுரமாகும் ஒவ்வொரு படைப்புக்கும் பரிசு ரூ. 25/

தும் ஆசிரியர் 'தன் கண் களுக்குத் தெரிய வில்லையே' என்று அங்கலாய்த்தார். இருவரும் நடந்தனர். ஆசிரியரும், மற்றவர்களும் பின்தொடர்ந்தனர்.

ஒரு தெய்வீக மணம் வீசுவதையும், தன் மாணவனின் வலதுபுறம் நடப்பவனின் காலடியில் வண்ண வண்ணப் பூக்கள் மலர்வதையும் கண்டனர். ஆக, 'துணைக்கு வந்தவன் எம் பெருமான் கண்ணனே' எனத் தீர்மானித்தனர். பூக்களை சேமித்துக் கண்களில் ஒற்றிக் கொண்டனர்.



ஒரு தெய்வீக மணம் வீசுவதையும் தன் மாணவனின் வலதுபுறம் நடப்பவனின் காலடியில் வண்ண வண்ணப் பூக்கள் மலர்வதையும் கண்டனர்!

இன்பசேகரனின் வீடுவரை வந்த ஆசிரியரும் மற்றவர்களும் அவனது தாயாரைச் சந்தித்து, இந்த அற்புதத்தைக் கூறினர். இறையருள் பெற்ற தன் மாணவனுக்கு நண்பனான மதுசூதனனைக் காண முடியவில்லையே என்று வருந்தினர்.

இன்பசேகரன் உருக்கமாகத் தன் சிநேகிதனை அனைவரும் காண அழைத்தான். மதுசூதனன் அனைவருக்கும் காட்சி தந்தான். எல்லோரும் பயபக்தியுடன் இறைவனை வணங்கி மகிழ்ந்தனர்.

ஒரு விழா!



'**கோ**குலம்' பத்திரிகையின் முன்னாள் கௌரவ ஆசிரியர், **குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா**. கடந்த ஜனவரி ஏழாம் தேதி இராயபுரம், 'சுப்பிரமணியன் பாலிடெக்னிக்' கல்லூரி வளாகத்தில் அவரின் திருவுருவச் சிலை திறப்பு விழா சிறப்பாக நடைபெற்றது. விழாத் தலைவராகப் பங்கேற்று சிலையைத் திறந்து வைத்தவர், பழனியப்பா பிரதர்ஸ் செ.மா.பழனியப்ப செட்டியார்.

''வாழ்நாள் முழுவதும் குழந்தைகளுக்காகவே கவிதைகளை எழுதி, தமது இலக்கியப் பணியைச் செய்தவர் வள்ளியப்பா. அவர் பிறந்த ஊரில், அவர் படித்த பள்ளியில் சிலை நிறுவியிருப்பது பெருமையான விஷயம்'' என்றார் இலக்கியச் சிந்தனை ப.லெட்சுமணன். ''கிட்டத்தட்ட 300 குழந்தை எழுத்தாளர்களை உருவாக்கிய பெருமை வள்ளியப்பாவுக்கு உண்டு'' என்று கூறினார் கவிஞர் செல்லகணபதி. விழாவின் கலை நிகழ்ச்சியில் பங்கேற்ற குழந்தைகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன!

- தேவி நாச்சியப்பன்




ஒரு விருது!

சென்னையில் ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்படும் புத்தகக் கண்காட்சி விழாவில், சிறந்த குழந்தை எழுத்தாளருக்கான 'குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா விருது' வழங்கப்படுகிறது. இந்த ஆண்டு ஜனவரி பதினேழாம் தேதி 'கவிஞர் பி.வி.கிரி' அவர்களுக்கு வழங்கப்பட்டது. இவர் தமிழ்நாடு அரசின் இதழான 'தமிழரசு' பத்திரிகையின் முன்னாள் உதவி ஆசிரியர். விருது பெற்ற கவிஞருக்கு கோகுலம் சார்பில் பாராட்டுகள்!

இருட்டில் வீசிய கற்கள்!

கதை : ரா.பிரதீப்குமார்
உறுப்பினர் எண் : 214
பத்தாம் வகுப்பு
காமராஜ் மேல்நிலைப் பள்ளி,
நம்பியூர்

படம் : ராம்கி













கண்ணன் மிகவும் சுயநலக்காரன்.
சத்தம் போடாமல் சாப்பிடுவோம். கிருஷ்ணன் எழுந்தால் பங்கு கேட்பான். ஆ!
சாப்பாட்டில் கல் தட்டுப்பட்டது.
அதனை எடுத்து வீசினான். இருட்டில் கிருஷ்ணன் மீது விழுந்தது. பிறகு இன்னொரு கல்...
மொத்தம் ஆறு கற்கள். நல்லவேளை எடுத்துப் போட்டுவிட்டோம்.
காலையில் எழுந்து ஊர் திரும்பினார்கள். வீட்டுக்குச் செல்லும் முன்...
கிருஷ்ணா, உன்னிடம் ஒரு விஷயம் சொல்லணும். இரவு மண்டபத்தில் எனக்குக் கட்டுச் சோறு கிடைத்தது. கொஞ்சமாக இருந்ததால் நானே தின்று விட்டேன். அதில் கற்கள் வேறு இருந்தன. அதனால் உனக்குக் கொடுக்கவில்லை.
கற்களா? அதை என்ன செய்தாய்?
கற்களை என்ன செய்வது? தூக்கி வீசிவிட்டேன்.
ஓ! இரவு என் மேல் கற்களை வீசியது நீதானா? அவற்றை நான் எடுத்துக் கொண்டேன். இதோ பார்!
கண்ணன் பார்த்தான். அத்தனையும் வைரக் கற்கள்.
நண்பா, நீ உணவை என்னோடு பகிர்ந்துகொண்டிருந்தால், இதை உன்னோடு பகிர்ந்துகொண்டிருப்பேன். ஆனால், இப்போது எனக்கு மட்டுமே சொந்தம்.
அடச்சே!

உலகில் நான்கில் மூன்று மடங்கு தண்ணீர் உள்ளது. இதில், நல்ல தண்ணீர் 2.7 சதவிகிதம் மட்டும்தான். இதில் 0.3 சதவிகிதம்தான் ஆறுகளிலும், ஏரிகளிலும் நிலத்தடி நீரிலும் நமக்குக் கிடைக்கக்கூடியதாக இருக்கிறது. மீதமுள்ள நல்ல தண்ணீர் துருவப் பகுதிகளில் உறைந்து கிடக்கிறது.

இன்று தண்ணீர் பற்றாக்குறை பிரச்னை உலகம் முழுவதும் உள்ளது. இந்தியாவின் நிலை மிக மோசம். இங்குள்ள தண்ணீரைப் பாதுகாக்க தீவிரமான முயற்சிகள் எடுக்கப்படவில்லை என்பதே உண்மை. இந்தியாவில் நல்ல தண்ணீரில் 15 சதவிகிதம் ஏற்கெனவே மாசடைந்து விட்டது. 2030ஆம் ஆண்டில் இது 60 சதவிகிதமாக உயர்ந்து விடும்.

'எதிர் வரும் 2020ஆம் ஆண்டில் இந்தியா மோசமான தண்ணீர் பற்றாக்குறையைச் சந்திக்கப் போகிறது' என்று சர்வதேச நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தரமான தண்ணீர் கிடைக்கும் நாடுகளை ஐ.நா. பட்டியலிட்டபோது, அதில் இந்தியா மிகவும் பின்தங்கியுள்ளது. பிரெஞ்சு, கயானா, கனடா, நியூஸிலாந்து போன்ற நாடுகள் தரமான தண்ணீர் பட்டியலில் உள்ளன.

இந்தியாவில் ஓடும் நதிகள்தான், வேறு எந்த நாட்டில் ஓடும் நதிகளைவிட படுமோசம். கங்கை முதல் பெரியாறு வரை ஒவ்வொரு நதியும் ஒவ்வொரு விதத்தில் மாசடைந்துள்ளன. பஞ்சாப், அரியானா, ராஜஸ்தான், கர்நாடகம் மற்றும் தமிழகம் ஆகிய ஐந்து மாநிலங்கள் தண்ணீர் பற்றாக்குறையால் எதிர்காலத்தில் மோசமாக பாதிப்படையும். எனவே, ஒவ்வொரு சொட்டு தண்ணீரையும்





தெரியுமா?

துளித் துளியாய்...

மார்ச்-28 உலக தண்ணீர் தினம்



கடைசி சொட்டு தண்ணீர் போல் நினைத்து பயன்படுத்த வேண்டும். அதற்கு நாம் எத்தகைய முயற்சிகளை மேற்கொள்ளலாம்?

- பல் துலக்கும்போது குழாயைத் திறந்துவிட்டபடியே இருக்கக்கூடாது.
- குழாயைத் திறந்துவிட்டுச் செய்யும் வேலைகளால் ஏராளமான தண்ணீர் வீணாகிறது. ஆகவே, பாத்திரம் கழுவும்போதும் வாகனங்களைக் கழுவும்போதும் பக்கெட்டில் பிடித்து வைத்துப் பயன்படுத்த வேண்டும்.
- அரிசி, காய்கறி கழுவிய நீர், மீன் தொட்டி நீர் ஆகியவற்றை வீணாக்காமல் செடிகளுக்கு ஊற்றலாம்.
- சொட்டும் குழாய்களைச் சரி செய்ய வேண்டும். ஷவரில் குளிப்பதைவிட பக்கெட்டில் மொண்டு குளிப்பது சிக்கனம்.
- மழையின்போதுதான் நீரைச் சேமிக்க முடியும். ஆகவே, ஒவ்வொரு வீட்டிலும் மழைநீர் சேமிப்பு அமைப்பைச் சரியாக அமைக்க வேண்டும்.

உ.சுல்தானா




எங்கும் பரந்து விரிந்திருந்த அந்த வனத்தில் பலதரப்பட்ட மிருகங்கள், பறவைகள், உயிரினங்கள், பிற ஊர்வன வாழ்ந்தன. இதற்கெல்லாம் மேலாக யானைகள் கூட்டம் கூட்டமாய் வசித்தன. இங்கு சிங்கம் மற்றும் புலி இனம் மட்டும் இல்லை. இதனால் இந்த வனத்தில் விலங்கினங்கள், பறவையினங்கள் நாளுக்கு நாள் அதிகரித்தே வந்தன. பல்வேறு கூட்டங்களாக யானைகள் வாழ்ந்தாலும் அவற்றுக்குத் தலைமை யானை ஒன்று இருந்தது. அது யானைகளுக்குள் வரும் சண்டை சச்சரவுகளைத் தீர்த்து சமரசம் செய்து வைத்து, வழி நடத்திக்கொண்டிருந்தது.

ஒருநாள் அந்தத் தலைவன் யானை காலில் பெரிய கருக்கட்டான் முள் ஆழமாகத் தைத்துவிடவே நடக்க முடியவில்லை. அப்போது அந்த வழியாக வந்த நரி ஒன்று தலைவன் யானை படுத்திருப்பதைப் பார்த்தது. யானையிடம் சென்று விசாரித்தது. யானை தன் காலில் தைத்திருந்த முள்ளைக் காட்டியது. நரி என்றாலே தந்திரமும் சூழ்ச்சியும் நிறைந்ததுதானே?

''யானையாரே, முள்ளை நான் எடுக்கிறேன். பதிலுக்கு என் ஆசையை நிறைவேற்ற வேண்டும்'' என்றது நரி.

யானை சம்மதித்தது. நரி தன் கூரிய பற்களால் தன் பலமுள்ள மட்டும் கடித்து இழுத்தது. முள் காலைவிட்டு வெளியே



"என்னிடம் முறைப்பு,விரைப்பு,எகத்தாளம், ஏளனம்னு வெச்சுக்கிட்டா தலைவன் யானைகிட்ட சொல்லி மிதிக்க வெச்சுடுவேன்..."



சிறுகதை

வந்தது. யானைக்கு மிகவும் சந்தோஷம்.

''உனக்கு என்ன வேண்டும்?'' என்று கேட்டது.

''உங்கள் மேல் அமர்ந்து காட்டில் சவாரி போக ஆசை'' என்றது நரி.

அதன்படி யானையின் முதுகில் நரி ஜம்மென்று ஏறி உட்கார்ந்துகொண்டது. யானை கானகத்தைச் சுற்ற ஆரம்பித்தது. அவ்வாறு செல்லும்போது, நரி மற்ற மிருகங்களை மிகவும் ஏளனமாகப் பார்த்தது. அவையும் யானையின் முதுகில் ஏறி சவாரி செய்யும் அளவுக்கு வந்த நரியைக் கண்டு பிரமித்தன. நரியைக் கண்டு எல்லா மிருகங்களும் சலாம் வைத்தன.


காலப் போக்கில், நரியின் அட்டூழியம் அளவுக்கு அதிகமானது. பலசாலி மிருகங்களான காட்டுப் பன்றி, கரடி, ஓநாய், செந்நாய், காட்டெருமை போன்றவை நரிக்கு மரியாதை கொடுப்பது சுய கௌரவத்துக்கு இழுக்கு என்று



யானை மேலே ஊர்வலம்!

எண்ணலாயின. இதை ஜாடைமாடையாக அறிந்த நரி, ''என்னிடம் விரைப்பு, முறைப்பு, ஏளனம், எகத்தாளமுன்னு வெச்சுக்கிட்டா தலைவன் யானையிடம் சொல்லி மிதிக்க வெச்சுடுவேன்!'' என்று பயமுறுத்தியது. அனைத்து மிரு

ப.வீரப்பன்



கங்களும் ஒன்று சேர்ந்தன. தலைவன் யானையிடம் நரியின் அராஜகப் போக்கைச் சுட்டிக்காட்டி, நியாயம் கேட்க முடிவெடுத்தன.

தலைவன் யானையைச் சந்திக்கக் கூட்டமாகச் சென்றன. முயல், யானையின் முன் வந்து வணங்கி, ''தலைவா, வணக்கம்! தங்கள் முதுகின் மேல் நரி சவாரி வந்ததால், காட்டிலுள்ள நாங்கள் அனைவரும் நரிக்கு தனி மரியாதை தந்தோம். அதுவோ எங்களை மட்டுமின்றி நரியைவிட பலமுள்ள மிருகங்களையும் ஏளனப்படுத்தியும், மிரட்டியும் வருகிறது. இதன் தொல்லை தாங்க முடியவில்லை. தாங்கள் நரியை தங்கள் முதுகில் சுமந்து வனவலம் வந்த காரணத்தைச் சொல்ல வேண்டும். இது இத்தனை காட்டு மிருகங்களின் சார்பாக எனது பணிவான வேண்டுகோள்' என்றது.

''அதெல்லாம் இப்போது வேண்டாம். அதை நான் பின்னாளில் சாவகாசமாகச் சொல்கிறேன். இனி அந்த நரி இந்தக் காட்டிலேயே இருக்காது போதுமா?'' என்றது. அனைத்து மிருகங்களும் 'சரி' என்பதுபோல தலையாட்டிச் சென்றன.

புதரின் மறைவில் ஒளிந்து நின்று பார்த்துக்கொண்டிருந்த நரியும் மற்ற மிருகங்களுக்குத் தெரியாத வகையில், தலைவன் யானையைப் பார்த்துக் கண்ணீர் மல்க நன்றிப் பெருக்குடன் வணங்கியது. தன்னை மன்னித்த யானையின் குணத்தை எண்ணி, அந்தக் காட்டை விட்டு வெளியேறி மறைந்தது. ○

The following particulars regarding the ownership of 'GOKULAM' the Tamil Monthly newspaper, are published, as called for by rule 8 of the Registration of Newspapers (Central) Rules 1956.

FORM IV

1. Place of Publication : Chennai
2. Periodicity of Publication : Monthly
3. Name of Printer : Lakshmi Natarajan
   Nationality : Indian
   Address : Old No. 36, New No.12, 4th Main Road, Kasturba Nagar, Adyar, Chennai - 600 020
4. Name of Publisher : Lakshmi Natarajan
   Nationality : Indian
   Address : Old No. 36, New No.12, 4th Main Road, Kasturba Nagar, Adyar, Chennai - 600 020
5. Name of Editor : Seetha Ravi
   Nationality : Indian
   Address : 'Mangala Ganesh', Second Floor, 15, IV Seaward Road, Valmiki Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041
6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total captial: **Bharathan Publications Private Limited, 47-NP., Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 032.**

I hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

1.3.2008

Lakshmi Natarajan
Publisher

கோகுலம்
சிறுவர் சங்கம்



'கோகுலம் சிறுவர் சங்கம்' பட்டியல் இந்த மாதமும் தொடர்கிறது. இவர்களின் புகைப்படங்கள் இரண்டாவது, மூன்றாவது அட்டைகளில்!

பட்டியல்

351) பெ.முகில், மூன்றாம் வகுப்பு, எல்.எம்.எஸ். பள்ளி, பொள்ளாச்சி.
352) பி.கௌதமன், ஏழாம் வகுப்பு, ஏ.ஆர்.ஆர்.மெட்ரிகுலேஷன் மேனிலைப் பள்ளி, கும்பகோணம்.
353) ஐ.சு.ஸ்ரீரஞ்சனி, ஆறாம் வகுப்பு, மகாத்மா காந்தி பள்ளி, தென்னூர்.
354) ஐ.சு.தியானேஷ்வர், ஐந்தாம் வகுப்பு, மகாத்மா காந்தி பள்ளி, தென்னூர்.
355) ஜி. வைஷ்ணவி, எட்டாம் வகுப்பு, மாண்டிசோரி பள்ளி, இலஞ்சி.
356) ஆர்.பிரணவராஜ், ஒன்பதாம் வகுப்பு, கிறிஸ்ட் தி கிங் மெட்ரிக் மேனிலைப் பள்ளி, கும்பகோணம்.
357) ஜெ.மஞ்சுளா, ஒன்பதாம் வகுப்பு, மூங்கிபாய் கோயன்கா பெண்கள் மேனிலைப் பள்ளி, சென்னை.
358) ர.கிரிநிவாஸ், மூன்றாம் வகுப்பு, பாரதி வித்யா மந்திர் மெட்ரிகுலேஷன் பள்ளி, ஆறகழூர்.
359) அபர்ணாகிருஷ்ணா, 3ஆம் வகுப்பு, டி.ஏ.வி.மேனிலைப் பள்ளி, சென்னை.
360) மு.சாய் ராஜேஷ்...... ஏ.கே.டி.அகாடமி மெட்ரிகுலேஷன் மேனிலைப் பள்ளி, விழுப்புரம்.
361) டி.காயத்ரி, பதினொராம் வகுப்பு, வேளாளர் மெட்ரிக் மேனிலைப் பள்ளி, மொடக்குறிச்சி.
362) நா.பிரசன்ன வெங்கடேஷ், ஆறாம் வகுப்பு, டி.ஏ.வி.ஆங்கில மேனிலைப் பள்ளி, சென்னை - 10.
363) து.வர்ஷா, இரண்டாம் வகுப்பு, வீட்டுப் பயிற்சி பள்ளி, சென்னை - 61.
364) கு.அகிலன், நான்காம் வகுப்பு, ஏ.கே.டி. அகாடமி மெட்ரிக் மேனிலைப் பள்ளி, வேளக்குறிச்சி.
365) பி.தமிழ்ச்செல்வி, சீதா கிங்ஸ்டன் மெட்ரிகுலேஷன், சென்னை.
366) பா.பார்த்தசாரதி, ஆறாம் வகுப்பு, கேந்திரிய வித்யாலயா, மதுரை.
367) ஏ.ரீபிகா, ஏழாம் வகுப்பு, ஸ்ரீ.வி.டி.எஸ். ஜெயின் மேனிலைப் பள்ளி, திருவண்ணாமலை.
368) எம்.சரவண பாலாஜி, ஆறாம் வகுப்பு, சாரதி சரஸ்வதி வித்யாலயா மெட்ரிகுலேஷன், மணலி.
369) எம்.பிரியதர்ஷினி, ஏழாம் வகுப்பு, ஸ்ரீ.ஏ.இராமசாமி மெட்ரிக் மேனிலைப் பள்ளி, கவுண்டம்பாளையம்.
370) ப.வ.ஹேம்சந்த், நான்காம் வகுப்பு, சூரஜ் மெட்ரிக் மேனிலைப் பள்ளி, தெள்ளாறு.



371) எம்.எம். ரங்கநாயகி, முதல் வகுப்பு, வெ.சுந்தரி மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளி, சென்னை - 33.

372) எம்.எம்.ரிதிக் விக்னேஷ்வர், எல்.கே.ஜி, வெ.சுந்தரி மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளி, சென்னை - 33.

373) அ.பார்த்திபன், எட்டாம் வகுப்பு, அரசினர் மேனிலைப் பள்ளி, மானாம்பதி

374) க.சாலிஹா பீவி, பதினொராம் வகுப்பு, அரசு மகளிர் மேனிலைப் பள்ளி, உளுந்தூர்பேட்டை.

375) செ.லோகேஸ்வரன், ஒன்பதாம் வகுப்பு, அரசு உயர்நிலைப் பள்ளி, உடுமலை.

376) க.சிந்துஜா, 6ஆம் வகுப்பு, குட் ஷெப்பர்ட் மெட்ரிகுலேஷன், சென்னை.

377) என்.எஸ்.பிரேம்நரேன், ஐந்தாம் வகுப்பு, அமிர்தா வித்யாலயா, கோயம்புத்தூர்.

378) கி.ஜெய்பிரியா, யு.கே.ஜி., சக்தி மெட்ரிகுலேஷன் பள்ளி, விருத்தாசலம்

379) என்.எஸ்.ஹரி தியாகராஜன், நான்காம் வகுப்பு, ஸ்டேன்ஸ் மேனிலைப் பள்ளி, கோயம்புத்தூர்.

380) பி.யாழ் அரசி..., சென்னை மாநகராட்சி பள்ளி, மடுவைகரை.

381) எஸ்.ஜெய்சந்திரன், ஆறாம் வகுப்பு, ரயன் இன்டர்நேஷனல் பள்ளி, சூரத்.

382) லூ.அன்றன் பிரிஜித் பெல்வி, பத்தாம் வகுப்பு, புனித குழந்தை இயேசு பெண்கள் மேனிலைப் பள்ளி, பாளையங்கோட்டை.

383) பா.நவநீதன், ஒன்பதாம் வகுப்பு, விவேகம் மேனிலைப் பள்ளி, தாராபுரம்.

394) பா.குணசுந்தரி, எட்டாம் வகுப்பு, பி.ஆர்.ஜி.மெட்ரிக் மேனிலைப் பள்ளி, பழனி.

385) ரா.ராஜா, பத்தாம் வகுப்பு, அரசு ஆண்கள் மேனிலைப் பள்ளி, மேட்டுபாளையம்.

386) கி.முத்துக்குமார், பதினொராம் வகுப்பு, ஆயிர வைசிய மேனிலைப் பள்ளி, பரமக்குடி.

387) எம்.ஜி.வினுஸ்ரீ, ஏழாம் வகுப்பு, எஸ்.டி.ஏ.பள்ளி, திருச்சி



388) இ.அருண்மொழி, பதினொராம் வகுப்பு, சென்னை கிறித்துவ மேனிலைப் பள்ளி, சென்னை.

389) க.லோகிதா, பதினொராம் வகுப்பு, ஆக்ஷிலியம் பெண்கள் மேனிலைப் பள்ளி, வேலூர்.

390) கோ.க.தினேஷ், ஒன்பதாம் வகுப்பு, வேதலோக வித்யாலயா மெட்ரிக் பள்ளி, சேந்தமங்கலம்.

391) எஸ்.பிருந்தாராவ்...., செண்பகவல்லி நர்சரி பிரைமரி பள்ளி, சேலம்.

392) எம்.பிரதியும்னன், எட்டாம் வகுப்பு, கிறிஸ்ட் தி கிங் மெட்ரிக் மேனிலைப் பள்ளி, கும்பகோணம்.

393) இரா. ஆஷாதேவிஸ்ரீ, ஐந்தாம் வகுப்பு,

கோகுலம் சிறுவர் சங்கம் - கூப்பன்

என் பெயர் : ....

வயது : ....

பெற்றோர் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

: ....

வீட்டு முகவரி : ....

....

....

புகைப்படம்

நான் கோகுலம் சிறுவர் சங்கத்தின் உறுப்பினராகச் சேர விரும்புகிறேன். உங்கள் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்கிறேன்.

(கையொப்பம்)

இதுவரை கோகுலம் சிறுவர் சங்கத்துக்கு கூப்பன் அனுப்பாதவர்கள் உடனே அனுப்புங்கள். உங்கள் நண்பர்களுக்கும் விஷயத்தைச் சொல்லி, அவர்களையும் உறுப்பினராக்குங்கள்!

விவேகானந்தா நர்சரி மற்றும் தொடக்கப் பள்ளி, வெலக்கல்நத்தம்.

394) செ.கார்த்திகேயன், எட்டாம் வகுப்பு, புனித அந்தோணியார் மேனிலைப் பள்ளி, திருச்செங்கோடு.

395) அ.ஹரித்ரா, நான்காம் வகுப்பு, ஆதர்ஷ் வித்யாலயா, சென்னை-14.

396) ஆர்.கிருஷ்ணகுமார், ஒன்பதாம் வகுப்பு, ஸ்ரீ சங்கர வித்யாலயா மெட்ரிக் பள்ளி, சேலையூர்.

397) எச்.எம்.நிஷா, எட்டாம் வகுப்பு, ஸ்ரீ வித்யா மந்திர் மெட்ரிக் பள்ளி, ஊத்தங்கரை.

398) பி.சிவக்குமார், ஆறாம் வகுப்பு, விவேகம் மேனிலைப் பள்ளி, தாராபுரம்.

399) பி.மஞ்சுளா, பதினொராம் வகுப்பு, ஜார்ஜ் மேனிலைப் பள்ளி, விஷ்ணுபுரம்.

400) அ.நிரஞ்சன், ஆறாம் வகுப்பு, டாக்டர் இராஜலட்சுமி சுந்தரராஜன் மேனிலைப் பள்ளி, சென்னை.



பொய் சொன்ன வள்ளுவர்!

கதைப் பாடல்

—கவிஞர் வெங்கடேச பாரதி

வீட்டின் முன்னே திண்ணையிலே
வெல்லத் தமிழில் வள்ளுவனார்
பாட்டுச் சொல்லி மாணவர்க்குப்
பாடம் நடத்தி வந்தார்!

''அய்யா! என்னைக் காத்திடுங்கள்
அடிக்கக் கணவன் வருகின்றான்''
பொய்யே இல்லை நான்விரைந்து
போக்குக் காட்டி ஓடிவந்தேன்'

என்ற பெண்ணை வள்ளுவனார்
இரக்கங் காட்டி ''வீட்டுக்குள்
சென்று மறைவாய் இரு'' என்று
சிரித்துக் கொண்டு சொன்னாரே!

அதன்பின் அந்தப் பெண் கணவன்
அதிகச் சினமே கொண்டுவந்த
விதமாய் ''அய்யா என் மனைவி
வேணி இந்தப் பக்கந்தான்

வந்தாள் அவளைப் பார்த்தீரா?
மறைத்தி டாது சொல்லுங்கள்
இந்தப் பொழுதே நானவளை
இங்கே கொல்வேன்'' என்றுரைத்தான்!

அவனைப் பார்த்துக் குறளாசான்
அழகாய்ச் சின்னச் சிரிப்புடனே
''எவளும் இங்கே வரவில்லை
இதுவே உண்மை'' என்று சொன்னார்!

அந்த நேரம் உள்ளிருந்த
அந்தப் பெண்ணோ இருமிவிட்டாள்!
வந்த அந்த ஆள் சினந்து
வள்ளு வரிடம் பேசலுற்றான்.

''உண்மை பேச வேண்டுமென்றே
ஊருக் கெல்லாம் உரைத்துவிட்டு
திண்மை யோடு பெரும்பொய்யைத்
திருவள் ளுவரே பேசியதேன்?''

என்று கேட்ட ஆளை ஓர்
இருக்கை தனிலே அமரவைத்து
''நன்று தம்பி! நானுண்மை
நவின்றி ருந்தால் என்னாகும்?

பாபம் செய்ய வைத்துவிடும்
பண்பைத் தின்றே ஏப்பமிடும்
ஏழ்மைக் குள்ளே இருந்தாலும்
இழிவைச் செய்தல் கூடாது

நானோ ஒருபொய் சொன்னதனால்
நங்கை உன்றன் மனைவியவள்
வீணே துன்பம் அடையாமல்
மீண்டு நன்மை பெற்றாளே!

உண்மை போலே சிலநேரம்
ஒருபொய் நலமே தருமென்றால்
பெண்கள் ஆண்கள் எல்லாரும்
பெரிய பொய்யும் சொல்லிடலாம்''

என்று சொன்னார் திருவள்ளுவர்
எழுந்த அவனோ புலவரிடம்
''என்றும் இனிமேல் மனைவியினை
என்றன் உயிர்போல் போற்றிடுவேன்

மன்னி யுங்கள் புலவரய்யா!
மனைவி வரட்டும்'' எனச் சொன்னான்
பெண்ணோ சிரித்த படிவந்தாள்
பிரிந்தோர் அன்பில் பிணைந்தாரே!






பெரிய நகரம் முதல் குக்கிராமம் வரையிலுள்ள இளம் சாதனையாளர்களை வெளிச்சமிட்டுக் காட்டும் பகுதியிது. விளையாட்டு, பேச்சு, ஓவியம் என எதுவாக இருந்தாலும் சரி, அவற்றில் மாவட்ட அளவிலோ, மாநில அளவிலோ கலந்துகொண்டு பரிசு பெற்றிருந்தால் அது குறித்த விவரங்கள், புகைப்படம், சான்றிதழின் நகல் ஆகியவற்றை அனுப்புங்கள். சிறந்தவை வெளியாகும். கோகுலம் சார்பாகவும் அவர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பரிசு அளிக்கப்படும்.

மறக்காமல் பள்ளி, வீட்டு முகவரியைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். முக்கியமான நிபந்தனை, அந்தச் சாதனை, கடந்த ஓராண்டுக்குள் நிகழ்த்தப்பட்டதாக இருக்க வேண்டும். பழையது வேண்டாம்!

அனுப்ப வேண்டிய முகவரி :


கோகுலம்,
சாதனைத் தளிர்கள்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032.





பலே பேச்சு!

கோனாபட்டு, ஸ்ரீசரஸ்வதி மேல் நிலைப்பள்ளியில் ஒன்பதாம் வகுப்பு படிப்பவர் புஷ்பா. பள்ளியிலும், மாவட்ட அளவிலும் நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றி வாகை சூடியுள்ளார். புதுக்கோட்டை மாவட்ட அளவில் நடைபெற்ற 'ஜூனியர் ரெட் கிராஸ் சங்கம்' நடத்திய பேச்சுப் போட்டியில் பரிசு பெற்றுள்ளார். எதிர்காலத்தில் ஏழை மக்களுக்கு உதவுவதே இவரது லட்சியமாம். இவரது லட்சியம் நிறைவேற வாழ்த்துவோம்!


VIVEKANANDA KENDRA KANYAKUMARI

BRANCH: CHENNAI

Arise! Awake!!



சௌந்தர்ய ஸ்லோகம்!

சென்னை, வியாச வித்யாலயா மெட்ரிகுலேஷன் பள்ளியில் எட்டாம் வகுப்பு படிப்பவர் மரகதவல்லி. இலக்கியம், வினாடி வினா போட்டிகளில் பங்கேற்று பரிசுகளைப் பெற்றுள்ளார். பள்ளிக் குழந்தைகளுக்கான, 'சௌந்தர்யலஹரி'யில் உள்ள ஸ்லோகத்தை, பொருளுடன் கூடிய விளக்க உரை நிகழ்த்தும் போட்டியில் பங்கேற்று பரிசும் சான்றிதழும் பெற்றுள்ளார். இவரின் சாதனை தொடர, கரவொலி எழுப்புவோம்!



கராத்தே கலக்கல்!


ALL INDIA ... KARATE CHAMPIONSHIP

Certificate of Merit

விருதாசலம், கலைவாணி தொடக்கப் பள்ளியில் ஐந்தாம் வகுப்பு படிப்பவர் சங்கரைய்யா. சிறுவயது முதலே கராத்தே மற்றும் யோகாசனம் கற்று வருகிறார். மாவட்ட, மாநில அளவில் பல்வேறு போட்டிகளில் பங்கேற்று, பரிசுகளையும் பெற்று வருகிறார். கடந்த ஜூலை மாதம், சென்னையில் நடந்த 'அகில இந்திய கராத்தே' போட்டியின் பதின்மூன்று வயதுக்குட்பட்டவர்கள் பிரிவில், இரண்டாம் பரிசு பெற்றுள்ளார். மேலும் பல சாதனைகளைப் புரிந்து கலக்க, வாழ்த்துவோம்!


தம்புவின் புது பிஸினஸ்!
கதை : ஜிங்மின் பெல் கிரியேஷன்ஸ்
தமிழ் வடிவம் : ராதிகா ரகு
ஒரு நாள் காலை ஆற்றங்கரையில்...
அது பால்காரன் பரமுதானே? இங்கே என்ன செய்றான்?
ஆற்றில் இறங்கறானே... அடப்பாவி!
ஓஹோ! புரிஞ்சு போச்சு.
ஊர் மக்களை ஏமாத்தறியா? பாடம் புகட்டறேன்!



பிறகு...
தம்பு மாட்டோடு வர்றானே...
மக்களே! நான் புது பிஸினஸ் ஆரம்பிச்சுட்டேன். நாளையிலிருந்து என்கிட்டே நீங்க பால் வாங்கலாம்.
அடுத்த நாள்...
மனைவியே! இந்த பால் குடத்தை உள்ளே வை.
உள்ளே இருக்கற தண்ணிக் குடத்தை எடுத்து வா.
தம்பு வியாபாரத்துக்குக் கிளம்பினான்.
பொறுங்க? பொறுங்க?
???


பரமுவோட பாலைவிட என்னோட பால் சுத்தமா இருக்கும். வாங்கிக்கங்க.
நிஜமாவா?
சத்தியமா... இதோ பாருங்க, சுத்தமான பால்.
இதுவா பால்? சுத்தமான தண்ணியாச்சே...
உண்மைதான்! இது சுத்தமான தண்ணிதான். ஆனா...
பரமு மாதிரி, நான் இதுல பாலை வைத்தலை. அப்போ நான்தானே உண்மையான வியாபாரி.
ஆமா!
நான் சொல்றது சரியா பரமு?
ஹா...ஹா... ஹா...
சே!

கடிதமாலை



படைப்பு ஏவுகணை!

''சாதனைச் சிகரங்கள்' பகுதியைப் பார்த்தது உற்சாகமானேன். 2008ஆம் ஆண்டு சுழல் கோப்பையை எங்கள் பள்ளி பெற படைப்புகளை ஏவுகணையாக்கிவிட்டோம்!

- கோ.பிரவீண்குமார், விழுப்புரம்

'ஹலோ டாக்டர் ஸ்பீக்கிங்' பகுதியின் மூலம் லூயி பாஸ்டர் வெறிநாய்க் கடிக்கு மருந்து கண்டுபிடித்த விஷயத்தை தெரியவைத்ததற்குப் பாராட்டுகள்!

- எம்.ஆஷிக் அஸ்வின், ஐந்தாம் வகுப்பு, மகாத்மா மெட்ரிகுலேஷன் பள்ளி, மதுரை

'வீரா சூரா' தொடர்கதை ஆரம்பமே வெகு ஜோராக இருக்கிறது. மாயமான மாணிக்கம் என்ன ஆனான்... என்பதை அறிய மனத்தை முப்பது நாட்கள் பொறுத்திருக்க வைப்பது கடினமாக உள்ளது!

- ஆர்.ஜி.காயத்ரி, திசையன்விளை

'இந்திய நாடு நம் வீடு' பகுதியில் இந்தியாவின் தலைப் பகுதி ஜம்மு - காஷ்மீர் பற்றி விரிவாகவும், தெளிவாகவும் விளக்க வைத்துவிட்டீர். பாராட்டுகள்!

- எல்.கே.நர்கீஸ், த.முருங்கப்பட்டி

'அறிவோம் அதிசயம்' பகுதியில் வெளியான 'செனகல் கம் அக்கேசியா' மரம் விண்வெளி சிலந்தி, செயலாளர் பறவை, நீலத் திமிங்கலம் பற்றிய வியப்பான செய்திகள் மிகவும் பயனுள்ளதாக அமைந்தது!

- சிவரஞ்சனி, உறுப்பினர் எண்: 179, ஸ்ரீ மகாதேவ குருஜி மெட்ரிகுலேஷன் பள்ளி, வலங்கைமான்

'பிப்ரவரி 2008' கோகுலத்தில் இடம் பெற்றுள்ள 'பல்லி கேட்ட வரம்' என்ற கதை, தமிழ்நாடு பாடநூல் கழகம் வெளியிடுகின்ற முதலாம் வகுப்புக்குரிய 'தமிழ் அமுது' நூலில் 'வால் தேடிய பல்லி' என்ற கதையின் மறு பதிப்பாக உள்ளது. எங்கள் அன்பு கோகுலத்தில் புதிய, சொந்தக் கற்பனைகள் மட்டுமே இடம்பெற வேண்டுமென விரும்புகிறேன்.

- யாழினி அன்புமணி, ஈரோடு

(ஹாய் குட்டீஸ்! இதுபோன்ற தவறுகள் இனி நேரக்கூடாது. சொந்தப் படைப்புகளை மட்டுமே அனுப்புங்கள் - ஆசிரியர்)

திருத்தம்!

பிப்ரவரி '08 இதழின் 'கோகுலம் சிறுவர் சங்கம்' பட்டியலில் (உறுப்பினர் எண்: 332) த.க.தமிழ்பாரதியின் பள்ளி பெயர் மாறிவிட்டது. ஸ்ரீ தியாகராயா உதவி பெறும் துவக்கப் பள்ளி, திருவாரூர் என்பதே சரியானது. தவறுக்கு வருந்துகிறோம்!

''பெரிய மிருகம் பெயரைச் சொல்லு!''
''யானை!''
''இன்னொரு மிருகம்?''
''இன்னொரு யானை!''

- எம்.சாய்பிரபு, எட்டாம் வகுப்பு, பொன்னையா ராமஜெயம் பள்ளி, தஞ்சாவூர்

''ஹோம்வொர்க் தப்பா செஞ்சதால அப்பாவைக் கூட்டிட்டு வரச் சொன்னா, தாத்தாவைக் கூட்டிட்டு வந்திருக்கியே...ஏன்...?''
''ஹோம்வொர்க் செய்தது என் அப்பா, அதனால் அவங்க அப்பாவைக் கூட்டிட்டு வந்திருக்கேன் சார்.''

- எஸ்.கே.அபிஷேக், நெய்வேலி



''மன்னா, எதிரி நாட்டு மன்னர் ஓலை அனுப்பியுள்ளார்.''
''அரண்மனைக்கு நாம் ஏற்கெனவே 'கான்க்ரீட்' போட்டாச்சு. ஓலை வேண்டாம். திருப்பி அனுப்பிவிடும்!''

- எம். மஞ்சு, ஒன்பதாம் வகுப்பு, புனித பிரான்சிஸ் சேவியர் மேல்நிலைப் பள்ளி, மாங்குழி

''நம்ம பையனுக்கு எட்டு தோசை சுட்டுப் போட்டேன். ஆனா, அவன் ஆறு தோசைன்னு சொல்றான்.''
''சரி விடு! சுட்டுப் போட்டாலும் அவனுக்கு கணக்கு வராது!''

- கோ.பிரவீண்குமார், ஆறாம் வகுப்பு, ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி வித்யாலயா பள்ளி, விழுப்புரம்

பரிசுப் பெட்டிகள்!

-ஒவ்வொன்றுக்கும் பரிசு ரூ.25/-

ராக்கெட்டினை முதலில் கண்டறிந்தவர்கள் சீனர்கள். இது 13ஆம் நூற்றாண்டில் கண்டறியப்பட்டது.

- வே.தனசேகர், முதல் வகுப்பு, கலைமகள் வித்யா மந்திர் பள்ளி, கும்மிடிபூண்டி




✠ செல்வத்தை உபயோகித்தால் தீர்ந்து விடும்; கல்வியை உபயோகித்தால் அதிகரிக்கும்! - ஸ்மித்

✠ வெற்றியில் கற்றுக்கொள்வதைவிட, தோல்வியில் கற்றுக்கொள்வது மிக அதிகம்! - மாத்யூஸ்

✠ உன் நண்பனை ரகசியமாகத் திருத்து. வெளிப்படையாகப் புகழ்! - ராபர்ட் வின்ட்

✠ தற்பெருமை எங்கு முடிகிறதோ, அங்குதான் ஒழுக்கம் ஆரம்பமாகிறது! - போர்டுமேன்

✠ ஆ.மகாலட்சுமி,
மூன்றாம் வகுப்பு,
ஊ.ஒ.துவக்கப்பள்ளி,
காயக்காடு.



1) உருண்டு திரண்ட காய்; உனக்கும் எனக்கும் பிடித்த காய்; கையால் உருவாகும் காய்; காம்பு இல்லாத காய் - என்ன காய்?

2) வெளிச்சத்துக்கு வெளுக்காதவன் காலடியில் கிடக்கிறான்; கூடப் பிறக்காதவன் நம்கூட நடக்கிறான் - அவன் யார்?

3) கோண முதுகுக்காரன்; கோணிப்பைத் தோல்காரன் - அவன் யார்?

விடைகள்:

1. பொரி விளங்காய், 2. நிழல், 3. ஒட்டகம்.

✠ ஜி.லலித், ஏழாம் வகுப்பு,
PACM ஆண்கள்
மேல்நிலைப் பள்ளி,
இராஜபாளையம்

தீய காற்று வீட்டை விட்டு வெளியே போக வேண்டுமெனில், நல்ல காற்று வீட்டுக்குள்ளே வர அனுமதிக்க வேண்டும். அதுபோல் தீய எண்ணங்களை வெளியேற்ற, நல்ல எண்ணங்களை மனதுக்குள் அனுமதிக்க வேண்டும். - காந்தி

✠ பி.சர்வேஸ்வரன்,
2 ஆம் வகுப்பு, ஹோலி
ஏஞ்சல்ஸ் நர்சரி பிரைமரி
ஸ்கூல், மதுரை

நமது உடலில் 6 லிட்டர் ரத்தம் உள்ளது. இதில் 4½ லிட்டர் உடல் முழுவதும் சுற்றி வருகிறது. மீதி 1½ லிட்டர் ரத்தத்தை சேமிப்பாக உடல் வைத்துள்ளது.

- ஆ.மகாலட்சுமி,
காயக்காடு



செவ்வாய் கிரகத்தில் ஒருநாள் என்பது 24½ மணி நேரம். கோடை நண்பகலில்கூட இங்கு 16°C குளிர் நிலை இருக்கும். குளிர்கால இரவிலோ 85°C வந்து விடும்.

- ஆர்.ஜி.காயத்ரி,11ஆம் வகுப்பு,
உ.இ.மேல்நிலைப் பள்ளி,
திசையன்விளை





புள்ளிகளை இணையுங்கள்!

1 முதல் 40 வரையிலான புள்ளிகளை இணைத்தால் இங்கே இருப்பது யாரென்று தெரியும்!

பரிசு ரூ.1000/-

போட்டி

இங்கே ஐந்து கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. விடைகளை நீங்கள் எங்கும் தேடிச் செல்ல வேண்டாம். இதே இதழில்தான் உள்ளன. அவற்றைக் கண்டுபிடித்து எழுதுங்கள். கூப்பனையும் பூர்த்தி செய்து இந்தப் பக்கத்தைக் கத்தரித்து அனுப்புங்கள். ஆசிரியர் தீர்ப்பே இறுதி. முடிவு தேதி 15.3.2008

அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர், கோகுலம்,
(பரிசுப் போட்டி)
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32



விடையைச் சொல்;பரிசை வெல் - 9

1. உலகிலுள்ள தண்ணீரில் நல்ல தண்ணீரின் சதவிகிதம் ....
2. குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பாவுக்கு சிலை நிறுவியுள்ள இடம் ....
3. மனிதன் பாதி மீன் பாதியாக உள்ள உருவத்தின் பெயர் ....
4. 'குக்னாமி' என்ற பண்டிகையில் வணங்கப்படும் உயிரினம் ....
5. தம்பு தொடங்கிய புது பிஸினஸ் ....

என் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

: ....

வீட்டு முகவரி : ....

....

....

வித்தியாசங்களைக் கண்டுபிடி!

இரண்டு படங்களுக்கிடையே எத்தனை வித்தியாசங்கள் உள்ளனவென்று கண்டுபிடியுங்கள்!





விடைகள்: 1. தோரணம் 2. சிறுவனின் கழுத்துப் பட்டை, 3. மெழுகுவர்த்தி எண்ணிக்கை, 4. சிறுவனின் பனியன் நிறம், 5. சிறுமியின் பாவாடை டிசைன்

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்



376



377



378



379



380



381



382



383



384



385



386



387



388



389



390



391



392



393



394



395



396



397



398



399



400

பெயர் மற்றும் விவரங்கள் 57-ம் பக்கம்

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN/CC(S)DN/109/06-08 · Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)DN/47/06-08 · Registered as a Newspaper in Srilanka